உள் நாடு வருட சந்தா ரூ. 3-0-0.
R. No. M. 3066 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹூ ஆவணி-மீ 25-உ (9—9—1934) | மலர் 3.

## இனாம்! சந்தாதாரர்களுக்கு இனாம்!

### அருமையான புததகங்கள் இனாம்!

நமது "பகுத்தறிவு" பத்திரிகைக்கு செப்டம்பர் மாதம் 1-உ-யிலிருந்து அக்டோபர் 1-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந்தாதாராராய்ச் சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கைவல்யம் | | 0-8-0 |
| இந்தியாவின் குறைபாடு | | 0-8-0 |
| இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்) | | 0-8-0 |
| மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை | | 0-8-0 |
| லெனினும், மதமும் | அணா 4 | 0-8-0 |
| பொதுவுடைமைத்தத்துவம் | ,, 3 | |
| போல்ஷ்விக் முறை | ,, 1 | |
| கடவுளும் பிரபஞ்சமும் | அணா 4 | 0-8-0 |
| சோஷியலிசம் | ,, 3 | |
| இலங்கை உபந்யாசம் | பை 6 | |
| சமதர்ம உபந்யாசம் | ,, 6 | |

மானேஜர், "பகுத்தறிவு", ஈரோடு.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | லோகல்போர்டுஆக்ட்(சென்னை) | 2-0-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திர மும் பயிற்சி முறையும் | 2-0-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| | | காந்தி-கிட்டு | 0-1-0 |
| The Right of Temple Entry | Re. 1—0—0 | The Curx of the Indian Problem | Re. 1—0—0 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு
ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பாதிரிகள் பிரமச்சரியம் என்னும் பெயரால் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்து செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி. செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

### மத புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கிறன. விலை அணு 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், ஈரோடு.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. 3—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணு ஒன்று.

விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள், பழைய மூடப்பழக்க வழக்கங்களையும் சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவு ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருடச் சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—
மனவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உரையூர், திருச்சி.

# கடவுளும், பகுத்தறிவும்.

(கொளும்பு தோழர் I. M. இப்ருஹீம்)

(17—6—34 தேதி புரட்சியில் வந்த கட்டுரைத் தொடர்ச்சி)

இந்த பயங்கரமான பூகம்பத்தை "கடவுளின் செய்கை" என்கின்றீர்களே இது கடவுளின் செய்கையென்றால், மக்களைச் சகிக்க முடியாத கொடுமைக்காளாக்கும் இத்தகைய கெடுதியை "அன்பும்- அருளும்-நீதியும்-கூறிய அறிவும் உள்ள ஓர் கடவுள்" உண்டாக்குவாரா? அந்தப்படியே உண்டாக்கி இருந்தாலும் அப்படிப்பட்ட ஒரு கடவுள் மக்களுக்கு எதற்கு? இத்தகைய கோரக் காட்சிகளை உண்டுபண்ணி நல்லவன்-கெட்டவன், ஆண்-பெண், சிறியோர் -பெரியோர், ஏழை-பணக்காரன், எளியவன்-வலியவன், கடவுள் பக்தன்-கடவுளின் விரோதி ஆகிய எல்லோரையும் ஒரே அடியாகச் சிறிதும் தயை, தாட்சண்யமின்றி சித்திரவதை செய்யும் இப்படிப்பட்ட கடவுளையா, மக்கள் "ஆண்டவனே மிகப் பெரியவன்!" "கருணையுடைய கடவுள்!! நீதியுடைய கடவுள்!!! அளவிலா அருட்ஜோதி!!!! எறும்பு முதல், யானை ஈராகவுள்ள எல்லாவற்றையும் படைத்து அவைகளுக்கு உணவளித்து, ரட்சித்துவரும் கடவுள்-பகவான்-இறைவன், ஜெஹோவா-ஆண்டவன்—அல்லாஹ்" என்றெல்லாம் புகழ்ந்து வணங்குவது? இந்த பூகம்பத்துடனே, அல்லது உலகத்தில் நடக்கும் பயங்கரமான நெருப்பைக் கக்கும் எரிமலைகளுடனே, வெள்ளப் பிரளயங்களுடனே, இடி, விபத்துகளுடனே, மக்கள் உணவில்லாமல் "பசி!" "பசி!!" என்று கதறிக் கதறி உயிர் துறக்கும் பயங்கரமான பஞ்சங்களுடனே-கொடிய நோய்களுடனே பக்தர்கள் (ஆஸ்திகர்கள்) சொல்லும் கடவுளை (ஆண்டவனை, அல்லாஹ்வை) ஒத்திட்டுப் பார்க்கும்போது அவரை நீதியுள்ளவன்-அருளாளன்-அன்புடையோன்-அறிவுள்ளவன் பூரணமானவன் என்று புகழமுடியுமா-அவனைத் தொழுது அவனிடத்தில் பிரார்த்திப்பதால் பலன் கிடைக்குமா? இத்தகைய கொடுமைகளை உண்டாக்கிய கடவுளை"-இத்தகைய அபாயகரமான கோர சம்பவங்களைத் தடுக்க முடியாத-நிகழவிடாமல் நிறுத்திக்கொள்ள முடியாத "இயற்கையின் கர்த்தா"வா இயற்கைக்கு முரணை, யாரும் பார்த்திராத "சுவர்க்கலோகத்தில் என்றும் அழியாத இன்பத்தைக் கொடுத்து மக்களை ஆதரிக்கப் போகிறார்? இதெல்லாம் மனித சமூகத்தையே மாற்றும் கபட நாடகம் என்று சொன்னால் அதை தக்க காரணங்களுடன் எதிர்ப்போர் யார்? இதை ஆதரிக்க அறிவாளிகள் இருந்தால் அவர்கள் முன்வரவேண்டாமா?

உலகத்தில் பெரும் பான்மையான மக்கள் வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் "இவ்வுலகத்தில் நாம் வாழ்க்கை நடத்துவது நரகலோக"த்தில் வாழ்க்கை நடத்துவதைவிட அபாயகரமானதாக இருக்கிறதே! நாம் என்ன செய்வது!! நமது குடும்பத்தைக் காப்பாற்றுவதை எப்படி!!! பசியின் கொடுமை எங்களால் தாங்க முடியவில்லையே!!!! குழந்தைகளின் அழு குரல் எங்களைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டுகிறதே!!!!!-தற்கொலை செய்துகொள்ளாவிட்டால் எங்களைப் பைத்தியக் காரர்களாக்கி விடும்போல் இருக்கிறதே!!!!!!.................." என்று ஏங்கித் தவிக்கும் ஏழைகளின் பரிதாபத்தை போக்குவதற்கு-அவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி பண்ணுவதற்கு அவர்களுக்கு இன்பம் அளிப்பதற்காக பாடுபடாமல்-அதற்காக ஒன்றும் செய்யாமல் வீணே "கடவுள்" "மதம்" "நபி" "அவதாரம்" "பரமபிதா" என்று சொல்லிக்கொண்டு கடவுளையும், மதத்தையும் காப்பாற்ற பாடுபடும் ஆஸ்திக சிகாமணிகளாகிய காந்திஜீயும், சங்கராச்சாரிகளும் அஹ்மதியாக்களும், "மார்க்கப் பத்திராதிபர்களும், பாதிரிகளும், போப்புகளும் இந்தப் பூகம்பத்தைப்பற்றி சொல்லியிருப்பதை—பத்திரிகையில் எழுதியிருப்பதைக் கவனிப்போம்.

ஈங்கு நாம் இம் மூன்று சாராருடைய வாதங்களை முக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனெனில் காந்தியாரை இந்தியாவில் பெரும் பான்மையான "ஹிந்து"த் தோழர்களும், "முஸ்லீம்க"ளில் சிலரும், கிறிஸ்தவர்களில் சிலரும் "இந்தியாவிலுள்ள 350000000 (முப்பத்தி ஐந்துகோடி) மக்களுக்கும் கதி மோட்சம் அளித்து ரட்சிக்க வந்த காந்தி மகாத்மா" மகான் என்று கருதி அவரை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவரை நம்பிய இந்தியாவின் (இந்திய மக்களின்) கதி என்னவாகக் கூடும் என்பதை உத்தேசித்தும்; அஹ்மதியாக்கள் "மிர்ஸாஸாஹிப் புத்திரகவும், கிருஷ்ணராகவும், ஏசுவாகவும் அவதரித்திருக்கிறார். அவர் தான் உலகத்திற்கு உண்மையான இஸ்லாம்மதத்தை யெடுத்துப் போதிக்கஉலகத்திற்கு கடைசி நபி (வழிகாட்டி)யாக ஆண்டவனால் அனுப்பப்பட்டிருக்கிறார். அவர் சொல்வதெல்லாம் இயற்கைக்கும், விஞ்ஞானத்திற்கும் பொருத்தமாயிருக்கின்றன. அவருடைய போதனை மாத்திரம் தான் உலகத்திற்கு சுபிட்சம் அளிக்கும். எனவே உலக மக்கள் எல்லோரும் கட்டாயம் மிரஸா ஸாஹிபை பின்பற்றித் தீரவேண்டும்" என்றுசொல்வதனால் அஹ்மதியாக்களின் ஞானம் எவ்வளவு சிறந்தது? அஹ்மதிய இயக்கம் உலகத்திற்கு அவசியமா? அஹ்மதியாக்களின் கொள்கை பகுத்தறிவிற்கு பொருத்தமாயிருக்கின்றனவா? என்பதை உத்தேசித்தும்; "சென்னையில் ஒரு இஸ்லாம் மத பிரசாரப் பத்திரிகை "மூடப்பழக்க வழக்கங்கள் அற்ற முறையில் பகுத்தறிவிற்கும், விஞ்ஞானத்திற்கும் பொருத்தமான முறையில் ஆஸ்திகப் பிரச்சாரம் செய்கிறோம்" என்று சொல்லிக்கொள்வதனால் அதன் பிரசாரம் மூடநம்பிக்கைகளை போக்கக் கூடியதா? அது பகுத்தறிவிற்கும், விஞ்ஞானத்திற்கும் பொருத்தமான முறையில் பிரசாரம் புரிகிறதா? என்பதை யுத்தேசித்தும் இங்கு இம்மூன்று சாராருடைய பூகம்பத்தைப் பற்றிய வாதத்தை எடுத்துக்கொண்டோம். இப்போது முதலாவது இம்மூன்று சாராருடைய வாதத்தைக் குறிப்பிட்டு விட்டு, இரண்டாவது அதை அலசிப்பார்ப்போம்.

தோழர் காந்தி பூகம்பத்தைப்பற்றி கூறியதாவது—:"உயர்ஜாதி ஹிந்துக்களாகிய பிராமணர்களை தாழ்ந்த ஜாதி ஹிந்துக்களாகிய ஹரிஜனங்களுக்கு கோவில் குளங்களில் பிரவேசம் அளிக்காத காரணத்தினால் கடவுளுக்குக் கோபம் ஏற்பட்டு பூகம்பத்தை யுண்டு பண்ணி தண்டித்தார்......என்றும்.

இலங்கையிலிருந்து அஹ்மதிகளால் வெளியாகும் "தூதன்" என்னும் மாதசஞ்சிகையில் "பூகம்பமும் அழிவும்" என்னும் தலைப்பின் கீழ் அதன் ஆசிரியர் வரைந்திருப்பதாவது:—"அல்லாஹ் அவனுடைய தீர்க்கதரிசிகளுக்கு மதங்களைக் கொடுத்து உலகத்திற்கு அருளினான்—அவர்களை மக்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் அல்லா(ஹ்) பூகம்பங்களையும், வெள்ளப் பெருக்கையும், எரிமலைகளையும், பஞ்சத்தையும் உண்டு பண்ணி மக்களை அச்ச முறுத்தி எச்சரிக்கை செய்கிறான். அதாவது முன்காலத்தில் கடவுள் நூஹ்நபியை அனுப்பினான் அக்காலமக்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்ததில் மாபெரும் வெள்ளப்பிரளயத்தை யுண்டுபண்ணி அத்தேசத்தையும், அத்தேச மக்களையும அழித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்தான். அதேமாதிரி முஹம்மது நபிக்குப்பின் உலக மக்களுக்கு வழி காட்டுவதற்கு ஒரு நபி தேவைப்பட்டத்தினால் இந்தக்காலத்திற்கு நபியாக (வழிகாட்டியாக) ஆண்டவன் மிர்ஸாசாகிபை அனுப்பினான். அவரை உலக மக்கள் ஏற்றுக்கொள்ளாததினால் இந்த பூகம்பமும் (பீஹாரில் ஏற்பட்ட பூகம்பம்) இதற்கு முன் அவருடைய காலத்தில் உலகத்தில் பல பாகங்களில் ஏற்பட்ட பூகம்பங்களும், வெள்ளப் பெருக்குகளும். எரிமலைகளும், பஞ்சங்களும், ஏற்பட்டன. இதற்கு முன்னமேயே (நிகழ்வதற்கு முன்னமேயே) இந்தப்பயங்கரமான அழிவுகளைப்பற்றி மிர்ஸாசாகிப் "தெய்வத்தால்அனுப்பப்பட்ட என்னை உலகம் ஒப்புக்கொள்ளாவிடில் இத்தகைய பயங்கரமான அழிவுகள் கடவுளால் ஏற்படும். இதை ஆண்டவன் எனக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறான்" என்று தீர்க்கதரிசனம் கூறியுள்ளார்."...

இந்நாட்டில் உலவிவரும் ஒரு இஸ்லாம் பத்திரிக்கையானது "கடவுளும் பூகம்பமும்" என்னும் தலைப்பின் கீழ் எழுதியிருப்பதாவது:— உலக மக்கள் கடவுளையும் அவனால் அனுப்பப்பட்ட தீர்க்க தரிசிகளையும், மதங்களையும் மக்கள் நிராகரித்து விட்டு நாஸ்திகத்தையும், லோகாயுதக்கொள்கைகளையும் கைகொண்டு வருவதனால் கடவுளுக்கு ஏற்பட்ட கோபாவேஷத்தால் பூகம்பத்தை யுண்டு பண்ணி மக்களை தண்டித்து எச்சரித்துள்ளான். இது தான் சரியான நியாயம். இதற்கு பொருத்தமாய்த்தான் காந்திஜீயும் சொல்லியிருக்கிறார் இதைத்தான் நாம் ஒப்புக்கொள்ள முடியுமேயன்றி. ரவீந்தரநாத் தாகூர் அவர்கள் "கடவுள் என்னும் ஒருவனால் நடந்தவையல்ல இந்த பூகம்பம். இது இப்பிரபஞ்சத்தின் இயற்கைத்தன்மை" என்று கூறி காந்திஜீயின் தெய்வத்தன்மை பொருந்திய அபிப்பிராயத்தை மறுத்த இவரது நாஸ்திக வாதத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியாது"... ...............என்றும் எழுதியிருக்கிறார்கள்.

இப்போது இம்மூன்று சாராருடைய "கடவுள் படைத்த பிரபஞ்சத்தில் நடக்கும் தெய்வத்தன்மை பொருந்திய நிகழ்ச்சி"களைப்பற்றிய வாதத்தைப்பற்றி பகுத்தறிவு என்ன சொல்லுகிறதென்பதைப் பார்ப்போம்.

"நாஸ்திகம் பரவுகிறதாலும், மேல் ஜாதிக்காரர்கள் ஹரிஜனங்களுக்கு கோவில் பிரவேசம் அளிக்காததாலும், தீர்க்க தரிசிகளையும் மதங்களையும் ஒப்புக்கொள்ளாததாலும் கடவுளுக்கு கோபாவேஷம் ஏற்பட்டது" என்றால் பெரிய மனிதர்கள் தான் (வயதும், அறிவும் வந்த மனிதர்கள்) தீர்க்க தரிசிகளையும்—மதங்களையும் ஒப்புக்கொள்ளாமல் நாஸ்திகத்தையும்—லோகாயுதத்தையும் அவர்கள் தான் ஆதரித்து வருகிறார்கள். கோவில் பிரவேசம்அளிப்பதுமில்லை. அதனால்அவர்கள் பேரில்கடவுளின் கோபாவேஷத்தைக்காட்டினர்: வெள்ள

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# சைனுவும், பொதுவுடமையும்.

(C. R. D.)

சைனு தேசத்தில் பொதுவுடமைக் கிளர்ச்சி எப்பொழுது ஆரம்பமாயிற்று, எப்படி ஆரம்பமாயிற்று, அது எவ்வெவ் விதமாக கிளர்ச்சி செய்தது, அது இன்று என்னிலையிலுள்ளது. அதனுலேற்பட்ட பாலாபலன்கள்யாது என்பவைகளைப்பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாக வரைந்துளேன். சமதர்மிகள் யாவரும் ஊன்றி வாசிக்கக் கோருகிறேன்.

1921-ம் ஆண்டில் சைனுதேசம் பல மாகாணங்களாக வகுக்கப்பட்டு அவைகள் திமிர்கொண்ட பிரபுக்களால் ஆளப்பட்டும், சில கொள்ளைக் கூட்டத்தலைவர்களால் நிர்வாகிக்கப் பட்டும் வந்தன. அக்காலத்தில் நாட்டில் எங்கு பார்க்கினும் பலதிரப்பட்ட கள்வர்களுடையவும், கொள்ளைக்கூட்டத் தாருடையவும் அட்டகாசம் சொல்லி முடியாது. அவர்கள் வைத்ததுதான் சட்டம். குடிகளுடைய உயிருக்கோ, உடமைகளுக்கோ யாதொரு பாதுகாப்பும் கிடையாது. எங்கும் கொலை, எங்கும்கொள்ளைதான் தேசம் இப்படிப்பட்ட அமளியில் இருக்கும் பொழுது பீகிங் உயர்தரக் கலாசாலையில் பயிலும் வாலிபர்கள் "தேசியப் புணருத்தாரண இயக்கம்" என்று ஓர் இயக்கத்தை ஆரம்பித்தனர். சைனுதேசத்தின் பழைய நாகரீகத்தை மறுபடியும் புதுப்பித்தல், சமூகக் கொடுமைகளைப் போக்கி விடுதலை யுண்டாக்குதல், கல்வியைப்பரப்புதல், அன்னிய தேச பாஷைகளைப் படிக்க வைத்தல், அதனுடன் தாய்ப்பாஷையையும் விருத்தி செய்தல் முதலிய இவைகளே மேற்சொன்ன இயக்கத்தின லக்ஷியங்களாகும். இக்கொள்கைகளை பரப்புவதற்காக அனேக புதிய புத்தகங்கள் வெளிபிடப்பட்டன. இதற்காக "வீக்லிக்ரிடிக்" என்ற பெயருடன் ஒரு பத்திரிகையையும் நடத்தி வந்தார்கள். இப்பத்திரிகையை ஆரம்பித்தவர் பெயர் சென்-டு-ஸ்யூ இவர்பீகிங்பட்டணத்தில் உள்ள நேஷனல் யூனிவர்சிடியில் பண்டிதராயிருந்தார். மேற்கண்ட பத்திரிகையை இவர் நடத்தி வருங்காலத்து இவருடைய கவனத்தை மார்க்ஸ் கொள்கைகள் பற்றியிழுத்தன. இவர் இருடைய நண்பரான மற்றொரு பண்டிதர் லீ. டா-சேயோ எனபவருடன் கூடி - லோசித்தா. இருவரும சேர்ந்து தங்களைச்சுற்றியுமிருக்கும் சில வாலிபர்களை அழைத்து ஒரு சிறிய சங்க மொன்றை ஸ்தாபித்தனர். அச்சங்கத்தைச் சார்ந்த வாலிபர்களுக்கு இரு பண்டிதர்களும் மார்க்ஸின் கொள்கைகளைப்போதித்தனர். இவ்விதம் ஸ்தாபிக்கப்பட்ட இச்சிறு சங்கமே சைனுவிலுள்ள பொதுவுடமைக் கிளர்ச்சிகளுக்கெல்லாம் உயிர் நாடியாக விளங்களாயிற்று. நாடோரும் இச்சங்கத்தில் புதிய அங்கத்தினர் சேர்ந்தபடியே இருந்தனர். இதில் அநேக ஏதேச்சாதிகாரர்களும், தொழிற் சங்கத்தாரும்சேர்ந்தனர். இவ்வாறு இந்த சங்கம் நாடோரும் வலுவடைந்துகொண்டேபோகலாயிற்று. அது மட்டுமல்ல. சைனுவில் ஸ்தாபிக்கப்பட்ட பொதுவுடமைச்சங்கத்தின்போக்கை சோவியத் அரசாங்கமும் இமைகொட்டாமல் மிகவும் நுட்பமாக கவனித்து வந்தது. ஜூலை மாதம் 15ல் சோவியத் அரசாங்கம் சைனு தேசமக்கள், சைனு அரசாங்கம் இவ்விரண்டிரகுமாக சேர்த்து ஓர் விண்ணப்பம் அனுப்பிந்தது. அதாவது கொடுங்கோல் மன்னருன ஜார் அரசன் காலத்தில் அம்மன்னனுல் உங்களுக்கு நேர்ந்த சிறுமைகளை நீங்கள் மன்னித்து மறந்து விடுங்கள். நாங்கள் உங்களுடைய விடுதலைப்போராட்டத்தில் எங்களால் கூடுமான உதவிகளை எல்லாம் செய்யத்தயாராயிருக்கிறோம். எங்களை உங்கள் தோழராகக் கருதுங்கள் என்ற விண்ணப்பத்தை வெளியிட்டது.

மேற்கண்ட சைனு பொதுவுடமைச்சங்கத்தின்காரியக்கமிட்டி அங்கத்தினர் பதவிக்குப் புதிதாக ஒருவர் தேர்தெடுக்கப்பட்டார். அவர் பெயர் எம். விர்னிஸ்கி. அவருடைய உழைப்பின் பயனுகவும், செல்வாக்கின் பயனுகவும் பொதுவுடமைச் சங்கத்தில் இடம் பெற்றிருந்த சில எதேச்சாதிகாரிகள் முதலான விஷமிகளை, சங்கததிலிருந்து நீக்கி விட்டார்: இப்பொதுவுடமை கட்சியினர் ஆங்காங்கு பல பிரமாண்டமான மகாநாடுகளைக் கூட்டினர். அம்மகாநாடுகளிலெல்லாம் தங்கள் கொள்கைகளை மக்களுக்கு விளக்கிக்காட்டி அதன் மூலம பிரசாரம் செய்தனர். இது மக்களுடைய கவனததை இழுத்தது. பொதுவுடமைச் சங்கததிற்கு வரவர பெருத்த ஆதரவும், அதன் பயனுக பலமும் பெருகிற்று. சைனுவில் தேசீய புரட்சி இயக்கம் என்ற ஒரு இயக்கமும் இருந்தது என்றுமுன்மேயே சொல்லியிருககிறேன். அதன் ஸ்தா

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# ஏழைகள் துயரம் நீங்க வழி.

## தோழர் ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

8-7-34ந் தேதி கும்பகோணத்தில் தோழர் ஈ. வெ. ராமசாமி செய்த சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

தோழர்களே!

இந்த தேசத்தில் ஏற்பட்டிருக்கும் ஜன சமூக அமைப்பின் அஸ்திவாரமே சரியாய் இல்லாமல் இருக்கிறது. இந்த அஸ்திவாரத்தின் மீது கட்டக் கூடிய எந்த அமைப்பும் ஜன சமூகத்திற்கு நன்மை யளிக்கக்கூடியதல்ல. ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படிச்சம அந்தஸ்தும், சமஉரிமையும் உண்டோ அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்கவேண்டியது அவசியமாகும். அப்போதுதான் மக்கள் சுகமாக வாழ முடியும். ஏதோ தான் பிறந்த வேளையின் பலன் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதுதான்; மற்றொருவன் சுகத்தை அனுபவிக்கப் பாத்தியதை யுடையவன் தான் என்னும் சோம்பேறி எண்ணமே மக்களை அழித்து வருவதற்கு முக்கிய கருவியாய் இருக்கிறது. இந்த எண்ணம் மாறுபட வேண்டியது அவசியமாகும். இதற்காக எவ்வளவு தியாகம் செய்தாலும் அது வீணுகாது. ஜனங்களின் மனுேபாவமும், வாழ்க்கையை நடத்தும் முறையும் மாறினுலொழிய வேறொரு முறையாலும்நன்மை உண்டாகாதென்பது திண்ணம். தற்போதிருக்கும் நிலைமையில் சுயராஜ்யம் வந்தால் குருட்டு நம்பிக்கையும், வைதீகமும் தான் வலுக்கும் தற்போது சுயராஜ்யம் அனுபவிக்கும் தேசங்களை எடுத்துக்கொள்ளுங்கள். ஏழைகள் நிலைமை அங்கே எப்படி இருக்கிறது? அமெரிக்கா ஜனநாயக ஆட்சியுடையதாகத்தான் இருக்கிறது. அங்கே லட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றுர்கள். அமெரிக்கா உலகில் செல்வத்திற்கே இருப்பிடமாயிருந்தும அங்கே ஏழைகள் நிற்க நிழலின்றி, உறங்க இடமின்றித்தவிக்கிறுர்கள். ஜர்மனியின் நிலைமை இன்று எவ்விதமாக இருக்கிறதென்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. சூரியனே அஸ்தமிக்காத சாம்பிராஜ்யத்தையுடையதென்று சொல்லும இங்கிலாந்தும் சுயராஜ்ய தேசமேயாகும். உலகத்திலெ பல நாடுகள் இங்கிலாந்தின் ஆளுகைக்குட்பட்டிருக்கின்றன. ஆனுல் அங்கு ஏழைகளா படும் துயரம் கொஞ்சநஞ்சமல்ல. சுயராஜ்ய முள்ள ஒவ்வொரு தேசமும் இப்படித்தான் இருக்கிறது சுயராஜ்யமோ, அன்னிய ராஜ்யமோ, குடி அரசோ, முடி அரசோ எந்த விதமான முறையிலும் மக்கள் சுகம் பெற முடியாத நிலைமையில் உலகம் இன்று இருந்து வருகிறது.

ஆகையால் ஏழைகள் துயரத்தைப் போக்க இந்திய சுயராஜ்யம் இப்போது சிலரால் கருப்படும் முறையில் யாதொரு நன்மையும் கொடுக்கப் போவதில்லை என்பது நிச்சயம் சமதர்மத்தையும், பொதுவுடமையையும் அஸ்திவாரமாகக்கொண்ட ராஜாங்க அமைப்பொன்றே மக்கள் சுகவாழ்க்கைக் குரிய வழியாகும். இதற்காக ஏன் நாம் தியாகம் செய்யத் தயாராயிருக்கக் கூடாதென்று கேட்கிறேன். உலகத்தில் பல வகையில் ஜீவராசிகள் மரணமடைகின்றன. பல நோய்களால் இறக்கிறவர்களின் தொகை சாதாரணமல்ல. மதத்தின் பெயரால் யாதொரு விவேகமுமில்லாமல் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு உயிரை மாய்த்துக் கொள்கிறுர்கள். இன்னும் பல வழிகளில் மரணமடையும்போது மக்களின் உன்னத வாழ்க்கை அமைப்பை உத்தேசித்துச் சிலரோ, பலரோ உயிரைத் தியாகம் செய்வது கூட பெரிய காரியமாகுமோவென்று கேட்கிறேன். மனிதனுக்கு மனிதன் எதற்காக வித்தியாசங்கள் காண்பிக்கப் படவேண்டும்? அறிவுள்ள எவரும் இனி இந் நிலைமையைச் சகித்துக்கொண்டு ஒரு க்ஷணமாவது வாழ முடியாது. பலாத்காரம் கூடாது. இம் முறைகளை மாற்ற பலாத்காரம் ஒருபொழுதும் வெற்றியடைய முடியாது. பலாத்காரம் பலாத்காரத்தையே பெருக்கும். உண்மை மறந்து விடும். ஆகையால் ஜனங்களுடைய மனதை மாற்றப் பாடுபட வேண்டியது தான் முறையேயொழிய பலாத்காரத்தினுல் சாதித்து விடலாமென்று எண்ணுவது மனித இயற்கைக்கு விரோதமான தத்துவமாகும். இந்த தேசத்தில் முன்னேற்ற முள்ளவர்களொன்று, பிற்போக்கானவர்கள் மற்றொன்ருக இரண்டு கட்சிகளே இருக்க முடியும். இப்படிப் பிரிக்கப் பட்டாலொழிய மக்கள் அபிவிருத்தியடைய மார்க்கமில்லை. நமது மக்களுக்கு விஷயத்தை அறியக்கூடிய பகுத்தறிவு விருத்தியடைந்தாலொழிய மற்றெந்த ராஜிய முறையாலும் ஒரு நன்மையும் விளைந்துவிடப் போவதில்லை.

(ஆ-போ)

## காங்கிரஸ்காரர்களின்

# வழ-வழா கொள்கைகள்.

## திருச்சி Dr. T. S. S. ராஜன் பதில்கள்.

### மன்னார்குடி.

3-9-34ல் மன்னார்குடி டவுன்ஹாலில் சிவ சுப்பிரமணிய அய்யர் எம். எல். சி. அவர்கள் தலைமையின்கீழ் நடந்த பொது கூட்டத்தில் மன்னார்குடி சுயமரியாதை சங்கத்தாரால் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கு முன்பு பீடிகையாக எனக்குத் தெரிந்த பதிலைச் சொல்கிறேன். கேள்வி கேட்டவர்கள் அதைத்தான் அங்கீகரிக்க வேண்டும் மறுத்துக் கேள்விகள் கேட்டு நேரத்தைக் கடத்தவேண்டாமென்று சுயமரியாதைக்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்று திருச்சி டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் முறையே பதிலளித்து வருகையில் கேள்விக்குத் தகுந்த பதிலில்லாத விடத்தில் கேள்விகளைக் கவனித்துப் பதில் சொல்லுமாறு கூட்டத்திலிருந்த ஓர் பிராமணர் சொன்னார்.

கேழ்வி:- 1. தென்னாட்டில் பரவி வரும் சுயமரியாதையியக்கத்தைப் பற்றி தங்களுடைய சொந்த அபிப்பிராயம் என்ன?

பதில்:- 1. சுயமரியாதை இயக்கத்தில் சில திட்டங்கள் ஒப்புக்கொள்ளத் தக்கதாக இருக்கலாம். எனக்கும், சுயமரியாதை யுண்டு. என்னுடைய சுயமரியாதைக்குப் பங்கமேற்படுமாகில் உயிரைக் கொடுத்தாவது அதைக் காப்பாற்றுவேன்.

கே 2. வெள்ளை அறிக்கையை கண்டிப்பதற்காக சட்டசபைக்குப் போகப்போகிறீர்களே? இந்த சட்டசபையிலேயே வெள்ளை அறிக்கைத் திட்டம் நிறைவேறி விடுமானால் மீண்டும் சட்டசபைக்குச் செல்லாமலிருப்பீர்களா?

பதில்:- 2; எங்களுடைய திட்டம் நிறைவேறி விடுமானால் நாங்கள் சட்டசபைக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை.

கே 3. சி. ஆர். தாஸ் காலத்தில் சுயராஜ்யக் கக்ஷியின்பேரால் பெரும்பான்மையானவர்கள் சட்டசபைக்குச்சென்றார்களே அவர்களுடைய பிரவேசத்தின் பயன் என்னவாயிற்று?

பதில்:- 3. சுயராஜ்யக் கக்ஷியார் சட்டசபையிலிருந்த காலத்தில் அரசாங்கத்தார் எவ்வித சட்டங்களையும் கொண்டுவர அஞ்சினார்கள்.

கே 4. அரசாங்கத்தார் மத நடுநிலைமையைவிட, காங்கிரஸின் மத நடுநிலைமை எந்த விதத்தில் வித்தியாசம் என்று கூறுகிறீர்கள்?

பதில்:- 4 சாரதா சட்டம் நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தார்உதவி செய்தார்கள். ஆனால் தீண்டாமை விலக்குச் சட்டத்தை வாப்பீஸ் வாங்கும்படி செய்துவிட்டார்கள். இருந்தாலும் காங்கிரஸ் நடு நிலைமையானது எந்த சட்டத்தை நிறைவேற்றுவதற்கும் பொதுஜன ஆதரவையே தேடும்.

கே 5. தாங்களும், தங்கள் சகாக்களும், குருகுலப் போராட்டத்தின் சம்பந்தமாக ராஜிநாமா செய்தீர்களே? சமபந்தி போஜனத்தைப் பற்றி தற்பொழுது தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

பதில்:- 5. எந்த முறையிலிருந்து காங்கிரசில் சமபந்தி போஜனத் தீர்மானம் நிறைவேறியதும் விலகினேனோ தற்போதும் அதே அபிப்பிராயத்தில் தானிருந்து வருகிறேன்.

கே 6. ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேச விஷயமாக ஒருவர் எதிர்ப்பு இருந்தாலும் சட்டம் செய்யமாட்டோம் என்கிற தங்களுக்கும், கடவுள் சொன்னால் ஆலயங்களைத் திறந்துவிட தயார் என்கிற ரஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியார் அவர்களுக்கும் எந்தவிதத்தில் வித்தியாசம்?

பதில்:- 6. ஆலயப் பிரவேச சம்பந்தமாக யாவருடைய மனமும் புண்படாமலிருக்க வேண்டுமென்பது தான் காந்தியாரின் அபிப்பிராயம், என்னுடைய அபிப்பிராயமும் அதுவே. ஆனால் ராஜா பகதூர் கிருஷ்ணமாசசாரியார் அபிப்பிராயத்தில் தலையிட நான் தயாராயில்லை. எங்களிடத்திலும் கடவுளே சொல்வாரானால் நாங்களும் கோவில்க் கதவுகளைத் திறந்துவிடத் தயாராகத்தானிருக்கிறோம்.

கே 7. தோழர் காந்தியவர்கள் வட்டமேஜை மகாநாட்டிற்குச்சென்று திரும்பியதும், மீண்டும் சட்ட மறுப்பு ஆரம்பிக்கப் போகின்றேன். எனது சகாக்கள் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும் எனறு அறிக்கை விட்டதும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்த தாங்கள், எந்த நோக்கத்தோடு தற்சமயம் காங்கிரஸில் சேர்ந்தீர்கள்?

பதில்:- 7 சட்ட மறுப்பு காலத்தில் நான் சிறைசென்றிருக்கின்றேன். மறுபடியும் செல்வதற்கு சௌகரியப்படாததால் காங்கிரஸிலிருந்து விலகிக்கொண்டேன்.

கே 8. காங்கிரஸ் சமதர்மக் கக்ஷியினரால் பாட்னாவில் 17 5-34ல் நிறைவேற்றப்பட்ட பதினேறு தீர்மானங்களைப்பற்றி தங்கள் சொந்த அபிப்பிராயம் என்ன?

பதில்:- 8. பாட்னா சமதர்மத் திட்டத்தைப்பற்றி காங்கிரஸ் அபிப்பிராயம் எதுவோ, அதுதான் என் அபிப்பிராயமும்.

கே 9. தோழர்கள் வரதராஜலுவும், ஈ. வெ. ராமசாமியும் வகுப்புவாதிகள், தேசத்துரோகிகள் என்று சொல்லும் காங்கிரஸ்காரர்கள், உண்மையிலேயே வகுப்புவாதத்திற்காகப் பிரிந்து சென்ற ஆனேயையும், மாளவியாவையும், கண்டிக்காததின் ரகசியம் என்ன?

பதில்:- 9. வரதராஜலுவும், ஈ. வெ. ராமசாமியும் காங்கிரஸுக்காக பல தியாகங்கள் செய்தவர்கள் தான். காங்கிரஸை விட்டுப் பிரிந்து செல்வார்களைக் கண்டிப்பதும், வந்து, சேருகிறவர்களை வரவேற்பதும் காங்கிரஸின் வேலையல்ல.

கே 10. ஹரிஜன முன்னேற்றத்திற்கென மாகாணக்கமிட்டியால் மன்னார்குடியில் நியமிக்கப்பட்ட பள்ளிக்கூட உபாத்தியாயர்களில் அய்யங்காருக்குமட்டும் மாதந்தோறும் தவறாது சம்பளம் வந்துகொண்டிருக்க, தாழ்த்தப்பட்டவருக்குமட்டும் மாதம் பதினொன்றாகியும் சம்பளம் வராமலிருந்தால் ஷை கமிட்டி ஹரிஜன முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறதென்று எப்படிச் சொல்லமுடியும்?

பதில்:- 10. ஹரிஜனங்களுக்காக ஐயங்கார் பாடுபட முன் வந்ததே பெரிய பாக்கியம். இருந்தாலும் தாழ்த்தப்பட்டவருடைய குறையைக்கவனித்து தக்கதைச் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

கே 11. ஹரிஜன மாகாண கமிட்டியார் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டதாக மன்னார்குடி கமிட்டியில் 11 பேர் ராஜினாமா செய்தார்களே, அதன் மூடு மந்திரம் என்ன?

பதில்:- 11. மன்னார்குடி ஹரிஜனக் கமிட்டியாரைக் கேட்டால் தான் அதன் மூடு மந்திரம் தெரியும் நான் அவர்களுக்கு ராஜி நாமா கொடுக்க வேண்டாமென்று பல முறை எழுதியிருக்கிறேன். மீண்டும் அவர்கள் ராஜினாமா கொடுத்து விட்டார்கள். ஆகையால் மறுபடியும் அவர்களையே கமிட்டியை ஒப்புக்கொள்ளும்படி சுயமரியாதைக்காரர்கள் செய்வார்களானால் அது எங்களுக்கு பக்க பலமாயிருக்கும்.

---

### கும்பகோணம்.

---

13-8-34ந்தேதி இந்தியா சட்டசபைத்தேர்தலைக் குறித்து டாக்டர் சாம்பசிவ அய்யர் தலைமையின் கீழ் கும்பகோணம் போர்டர் டவுன்ஹாலில் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் ஓர் பிரசங்கம் செய்தார். சுமார் 1½ மணிநேரம், காங்கிரஸ் எதற்காக சட்டசபைத் தேர்தலில் கலந்து கொள்ள முடிவு செய்கிறதென்பதைப்பற்றியும், வெள்ளை அறிக்கை சமூகத்தீர்ப்பு முதலிய விஷயங்களைப்பற்றியும் பேசினார். கடைசியில் கேள்விகள் இருந்தால் கேட்கலாமென்று சொன்ன சனாதனிகள் கேள்விகள் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு நீண்ட பிரசங்கங்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இப்படி செய்தது கூட்டத்திலிருந்த பலருக்கு பிடித்தமில்லையாகிலும் டாக்டர் ராஜன் எல்லாவற்றிற்கும் தனக்குத்தோன்றிய முறையில் பதிலுரைத்தார்.

தோழர் ஜி. வி. வெங்கிட்டராம அய்யர் அவர்கள் (அட்வகேட்) எல்லா கக்ஷிகளும் தான் வெள்ளை அறிக்கையைகண்டிக்கின்றன. அப்படியிருக்க காங்கிரஸ் கண்டிப்பதில் என்ன விசேஷமிருக்கிறது? மேலும் வகுப்புத் தீர்ப்பு விஷயமாய் காங்கிரஸ், ஹிந்து சமூகத்தைக்காட்டிக் கொடுத்து விட வில்லையா?

டாக்டர் ராஜன்:— மற்ற கட்சிகள் கண்டித்த போதிலும், கடைசியாய் வெள்ளை அறிக்கையை நிர்ப்பந்தித்து அமுலுக்குக் கொண்டு வந்து விட்டால் அதை உபயோகப்படுத்தலாமென்றே கருதுகிறார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள், எவ்விதத்திலும் அதன் முகத்தில் விழிக்கப்போவதில்லை. நிர்ப்பந்தித்து வந்தால், அத்துடன் ஒத்துழைத்து மேல் நடத்தவும் தயாராயில்லை. வகுப்புத்தீர்ப்பு விஷயம் நன்கு தலைவர்களால் பரிசீலனை செய்யப்பட்ட பின்பே தற்காலமுள்ள முடிவிற்கு வந்திருக்கிறார்கள். முஸ்லீம்கள் கூடிய சீக்கிரம் தாங்கள் செய்து வரும் தவறை உணர்வார்கள். அப்பொழுது அவர்களுடன் ஹிந்துக்களும், மற்றவர்களும் ஓர் சமாதானம் செய்து கொள்ள சாத்தியமா யிருக்கும். அதை விட்டு விட்டு அவர்களுடன் சண்டையிட்டுக் கொள்வது சரியல்ல வென்று நினைத்தே காங்கிரஸ் பிரஸ்தாபத்தீர்மானத்தைச் செய்திருக்கிறது. இதில் காட்டிக்கொடுப்பதொன்றுமில்லை.

தோழர் எஸ் மகா லிங்க அய்யர், பி. ஏ. பி. எல்:—காங்கிரஸ்காரர்கள் வெள்ளை அறிக்கையைத் தள்ளவும், அடக்கு முறைச்சட்டங்களை ரத்து செய்யவும் மாத்திரம் சட்ட சபைக்குள் பிரவேசிக்க விரும்புகிறார்களென்றும், வேறு எந்த விஷயத்திலும் கலந்துகொள்ள மாட்டார்களென்றும் உறுதி மொழி கொடுக்க முடியுமா?

பதில்:—முடியாது. ஜனங்கள் நன்மைக்கான விஷயங்களில் நான் கலந்து கொண்டே தீருவேன்.

கே:—காங்கிரஸ், வெள்ளை அறிக்கையைத் தள்ளுவதில்மற்ற கக்ஷியைவிட என்ன அதிகமான பலன் எதிர்பார்க்கப்படுகிறது?

ப:—காங்கிரஸ்காரர்கள் தாக்ஷண்யமன்றி அதை தள்ளுவதால், சர்க்கார் அதை திருத்தி இன்னும் அதிக

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

## சங்கரைய்யா— கனகாபாய்

# திருமணம்.

2—9—34ந்தேதி மாலை 5-30 மணிக்கு குடிஅரசு ஆபீஸ் சப்பெடிட்டர் தோழர் எ. சங்கரைய்யா அவர்களுக்கும், ஈரோடு முனிசிபல் பாடசாலை உபாத்தியாயனி தோழர் கே. பாப்பம்மாள் குமாரத்தி தோழர் கனகாபாய் அவர்களுக்கும் ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்கள் நந்தவனத்தில் ஈரோடு முனிசிபல் கவுன்சிலரும், மகாஜன ஹைஸ்கூல் காரியதரிசியும், அர்ப்பன் பேங் பிரசிடெண்டுமான தோழர் எம். சிக்கையா அவர்கள் தலைமையில் "திருமணமென்னும்" வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நடைபெற்றது.

மாலை 4—30மணிக்கு மணமக்களை தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மாளிகையிலிருந்து கடைவீதி வழியாக மோட்டாரில் பாண்டு வாத்தியங்களுடன் தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்களின் நந்தவனத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

திருமணத்திற்கு உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஆண்களும், பெண்களுமாகசுமார் 2000 பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள் அவர்களில் முக்கியமானவர்கள் தோழர்கள். E. V ராமசாமி, K. A. சேக்தாவுது சாயபு (சேர்மென்), M. சிக்கையா, E. V. கிருஷ்ணசாமி, E. S. கோவிந்தசாமி நாயடு S. மீனாக்ஷிசுந்தர முதலியார், கேசவலால் காளிதாஸ் சேட், K. குதரத்துல்லாசாகிப் ஈ. ஓ. சி. எம். கிருஷ்ணசாமி, எம். ஏ. ஈஸ்வரன், ஏ. ஜி. ராமசாமி நாயக்கர், டி. டீ. கோபால், எஸ். ராமசாமி நாயக்கர், ஆர். டீ. எல்லநாயகம், டாக்டர் எம். கிருஷ்ணசாமி, M. K. தாயாரம்மாள் டி. ஜி. வெங்கடாசலம், (துடுப்பதி) ப. ஜீவானந்தம், ஏ. ரத்தினசபாபதி, ஆர். அன்னபூரணி, எஸ். வி. லிங்கம், வி. எஸ். முருகேசருமுதலியார், சேலத்திலிருந்து சூர். எஸ். அருணாசலம், கே. கிருஷ்ணசாமி, கே. சிவபெருமாள், எல். கே. பெருமாள், பி. என். சின்னசாமி, ஏ. சித்தையன், நாகேந்திரன், ஏ. எம். பாலுசாமி, நடேசன், வி. எம். குப்தா, M.A., பீ. பி. பானிசிங், கோவையிலிருந்து சங்கரலிங்கம், ரங்கராஜ், ரங்கசாமி, ஆறுமுகம், முனியப்பன், ராமதாஸ், மஞ்சுளாபாய், ஆர். கிஸன், ராமசுந்தரம் கரூரிலிருந்து மதுரை பால ஷண்முகானந்த சபையின் பிரதம நடிகரான டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, திவாகரன், முதலியவர்களும், எஸ். ஆர். கண்ணம்மாள் ஈ. வி. கே. ரங்கநாயகி அம்மாள், ஈ. வி. லக்ஷிமி அம்மாள், ரங்கம்மாள், தேவானந்தம் அம்மாள், கே. பாப்பம்மாள் வாணியம்பாடி கோவிந்தராஜுலு அவர்கள், அவரது மனைவியார், வெ. மு. வீராசாமி, என். ராமாமி, அவரது மனைவியார், எம். சி. கிருஷ்ணம்மாள், நாகபட்டிணம் டி. எஸ். மணி, சூலூர் கருப்பணன் மணமகனின் உறவினர்கள் திண்டுக்கல்லிலிருந்து நா. வெ. ச. சங்கரையா நாயுடு, குண்ணத்தூரிலிருந்து நா. வெ. ச. நாராயணசாமி நாயுடு முதலியவர்களாவார்கள்.

திருமண ஒபந்த வைபவத்திற்கு தோழர் எம். சிக்கையா அவர்களைத் தலைமை வகிக்கவேண்டுமென்று தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பிரரேபிக்க தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் ஆமோதிக்க தலைவர் பலத்த கரகோஷத்தினிடையே தலைமை வகித்து முகவுரையாக மணமக்களைப் பற்றிப்பேசினார். பின் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் திருமணத்திற்கு வர முடியவில்லை என்று கீழ்க்கண்டவர்களிடமிருந்து வந்த கடிதங்களைப்படித்தார். அவர்கள் பெயர்கள் வருமாறு:—

சென்னை தமிழ் நாடு ஆசிரியர் டாக்டர் பி. வரதராஜுலு, நவசக்தி ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், எஸ். குருசாமி, குஞ்சிதம், அ. பொன்னம்பலனார், கே. எம். பாலசுப்பிரமணியம், கோவை ஏ. ஆர். சிவானந்தம், நாராயண ராஜ், உ. கந்தசாமி, திருச்சி கே. ஏ. பி. விஸ்வநாதன் ராவணதாஸ், திண்டுக்கல் எம். சாமி, சிவநேசம், திருப்பூர் சி. கே. சுப்பிரமணியம், சாமிசிதம்பரனார், ஜோலார்பேட்டை வி. ஏ. பார்த்தசாரதி, தா ப. நித்தியானந்தம், எஸ். கே. வரதராஜுலு, கும்பகோணம் கே. கே. நீலமேகம், சேலம் எஸ். சி. ரங்கசாமி, திருப்பத்தூர் எம். நடேசன், வல்லம் எஸ். வாசுதேவன் ராஜம்மாள், தூத்துக்குடி கே. கே. ஏ. பெரியசாமி, எஸ். ரங்கநாதன், திருச்சி ச. ம சி. பரமசிவம், பல்லடம், எஸ். ஏ. மாணிக்கம் திருச்சி எஸ். நீலாவதி, ராமசுப்பிரமணியம் கோட்டையூர் சிதம்பரம். ரங்மாள், மன்னார்குடி கே. ஆர். ஜி. பால் முதலியவர்களாகும்.

பின தோழர்கள் டி. எம். நரசிம்மாச்சாரி, எஸ். மீனாட்சி சுந்திர முதலியார், ஈ. வெ. ராமசாமி, ஈ. வெ. லக்ஷிமியம்மாள், டாக்டர் எம். கிருஷ்ணசாமி, ப. ஜீவானந்தம் முதலியவர்கள் "சீர்திருத்த திருமணம்" என்பது பற்றிப் பேசினார்கள். தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பேசும்போது 'பழைய காலத்திருமணமும்—சுயமரியாதைத் திருமணமும்" என்பதை வந்திருந்த ஜனங்கள் மனதில் நன்கு பதியுமாறு விளக்கமாகவும், தெளிவாகவும் சுமார் 1-மணிநேரம் பேசினார். தோழர்கள் டி. கே. ஷண்முகம், ராமதாஸ், ஏ. சித்தையன், மஞ்சுளாபாய் முதலியவர்கள் பெண்ணுரிமைக்கீதங்கள் பாடினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் வந்தனோபசாரம் கூற திருமண வைபவம் இனிது முடிந்தது. இரவு தோழர் கண்ணம்மாள் அவர்கள் மாளிகையில் ஒரு விருந்து நடைபெற்றது.

# Dr. வரதராஜுலுவின் திக்குவிஜயம்.

## யூனியன் போர்ட் வரவேற்பு.

## எதிர்பாராத ஆதரவுகள்.

### ஆம்பூர்.

வடாற்காடு ஜில்லாவில் முக்கியமான ஓர் இடமாகிய ஆம்பூரில் இன்று என்றுமில்லாததோர் குதூகலம் தென்பட்டது. திவான்பகதூர் பி. முனுசாமி நாயுடு, தோழர் வி. எம். ராமசாமி முதலியார் எம். எல். சி., டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு ஆகிய மூவரும் இன்று காலை 9 மணிக்கு இங்கு வந்து சேர்ந்தார்கள். தலைவர்களை இங்கு குதூகலமாக வரவேற்றார்கள். சுற்றுப்புறங்களிலுள்ள முக்கியமான கிராமங்களுக்குச் சென்று முக்கியஸ்தர்களைக்கண்டு பேசினார்கள். தலைவர்கள் விஜயத்தை முன்னிட்டு ஆம்பூர் யூனியன் போர்டு தலைவர் தோழர் முகம்மது உஸ்மான் சாகிப் பகதூர் மத்தியானம் ஒரு சமபந்தி விருந்தொன்று விமரிசையாக நடத்தினார். வடாற்காடு ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 100 பிரபலஸ்தர்கள் வரை விருந்திற்கு வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் திவான்பகதூர் பி. முனுசாமி நாயுடு (சித்தூர்) தோழர் வி. எம். ராமசாமி முதலியார் எம். எல். சி. (வடாற்காடு ஜில்லா போர்டு உபதலைவர்), "தமிழ்நாடு" ஆசிரியர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, தோழர்கள் ஏ. இராமச்சந்திர நாயுடு (சின்னவாரிக்கம்), ஏ. செங்கம நாயுடு சின்னவாரிக்கம் (ஜில்லா போர்டு அங்கத்தினர்) பி. ரங்கசாமி நாயுடு பாங்கர் (கார்கூர்) பி. சங்கரையா நாயுடு, டாக்டர் நாதமுனி நாயுடு; பி. முனிரத்தினம் நாயுடு, (மிராசுதார்) ஏ. போடி நாயுடு (மிராசுதார்) எகரியாநாயுடு (மிராசுதார்) கே. ஜி. ராமச்சந்திர ரெட்டியார், (மிராசுதார்), கே. ஜி. வீராசாமி நாயுடு (மிராசுதார்), பூங்காவன நாடார் (பாங்கர்) ஆம்பூர் பூஸா புத்தப்ப முதலியார் (பாங்கர்) ஆம்பூர், ராமலிங்க முதலியார் (பாங்கர்) ஆம்பூர், எ. கே. கோவிந்தராஜ முதலியார் (பாங்கர்), தங்கவேலு கவுண்டர் (வர்த்தகர்) எம். பி. மாணிக்க முதலியார் [மிராசுதார்] ஆர். வேணுகோபாலச்செட்டியார் (வேலூர்) ஜி. எம். சாமிநாத முதலியார் (குடியாத்தம்) மூர்த்தி, சுவாமி ஷண்முகானந்தம், எம். வி. துரைசாமி, முதலியார் (குடியாத்தம்) வி. எஸ், விஸ்வநாதன் (முனிபல்பல் கௌன்சிலர் வாணியம்பாடி) கே. கிருஷ்ணசாமி நாயுடு முதலியவர்கள் விருந்திற்கு வந்திருந்தவர்களில் முக்கியமானவர்களாவர்.

### பெரும் ஆதரவு.

விருந்து முடிந்ததும் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு தங்கியிருந்த ஜாகையில் வடாற்காடு ஜில்லா ஓட்டர்களின் ஆலோசனைக்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# ஈரோடு முனிசிபல் எலக்ஷன்.

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு எலக்ஷன்கள் நடக்க தேதிகள் குறிப்பிட்டாய் விட்டன. செப்டம்பர் மாதம் 15ந் தேதி நியமனச்சீட்டுகள் [நாமினேஷன் ஸ்லிப்பு] தாக்கல்செய்யவேண்டுமென்றும், 17ந் தேதி அவை பரிசீலனை செய்யப்படும் என்றும், 27ந் தேதி எலக்ஷன் நடைபெறுமென்றும், 28ந் தேதி முடிவு தெரிவிக்கப் படுமென்றும் குறிப்பிடப்பட்டு வெளிப்படுத்தியாய்விட்டது. இதன் பிறகு ஈரோட்டில் தேர்தல் பேச்சுகளும், பிரசாரங்களும் வெகு தடபுடலாய் நடக்கின்றன.

யார் வருவதைப்பற்றியும், யார் போவதைப்பற்றியும் நாம் கவலைப்படவோ யாருக்கும் யோசனை சொல்லவோ வரவில்லை. ஆனால் கக்ஷிகள்—இயக்கங்கள், பெயர்களைச் சொல்லிக்கொண்டு தனிப்பட்ட மக்களின் யோக்கியதாம்சங்களைப்பற்றி கவனிக்காமல் நடத்தும் சூழ்ச்சிப்பிரசாரம் மாத்திரம் வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். எல்லா வகுப்பாருக்கும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவேண்டும் என்பதும், கை பலமும், பண பலமுமே ஒரு மனிதனுடைய தேர்தலுக்கு யோக்கியதாபக்ஷமாய் இருந்துவரக்கூடாது என்பதும் நமது விருப்பமாகும். எப்படி இருந்தாலும இதுவரை கிடைத்த செய்திகளில் இருந்து ஒன்று அல்லது இரண்டு வார்டுகளில் பணம் புளியங்கொட்டைகள் போல் நடமாடக்கூடும் என்பதாகத்தெரிகின்றது. இருவர்போட்டி போட்டு எவ்வளவு பணம் செலவழித்தாலும் ஒருவர் தான் தேர்ந்தெடுக்கக்கூடுமே ஒழிய ஒரு ஸ்தானத்துக்கு இருவர் தேர்ந்தெடுக்க முடியாது. ஆகையால் பணச்செருக்கு கொண்டவர்கள் பணச் செலவில் ஒருவருக்கொருவர் இளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டி சூதாடுவது போல் "வந்தால் வரட்டும் போனால் போகட்டும்" என்று கருதி வீணாக்காமல் "பெரிய மனிதர்கள்" என்பவர்களை வைத்துக்கொண்டு கவுன்சில் ஸ்தானத்தை ஏலம் போட்டு அதிக தொகை செலவில் யார் எந்தப் பொதுக் காரியத்தைச் செய்து முடிக்க ஒத்துக்கொள்கிறார்களோ அவர்களுக்கு விட்டு விடுவதாய் ஏற்பாடு செய்தால் அதனால் பொது நன்மை உண்டு. அப்படிக்கில்லாலாமல் வீணாக வாரி இறைப்பதில் பயனில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம் முனிசிபாலிட்டிகளுக்குக் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டு விட்டபடியாலும் ஈரோட்டிற்கும் சீக்கிரம் ஒரு மாதத்திற்குள் வந்துவிடக்கூடுமாதலாலும் வரும்படியையும், அதிகாரத்தையும் உத்தேசித்துக் கவுன்சிலர்களாக நிற்கின்றவர்கள் ஏமாற்றமடைய நேரிடும் என்பதையும், சுதந்திர எண்ணமும், சொந்த செல்வாக்கும் இல்லாதவர்கள் கவுன்சிலர்களாக நினைத்து வீண் செலவிடுவதும், பயனற்றதுடன் கவுன்சிலர்களாக ஆனாலும் அவர்கள் கவுன்சில் கூட்டங்களில் ஒதுக்கித்தள்ளப் பட்டுவிடுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சிலர் முன்ஜாக்கிரதையுடன் ஓட்டுகள் சேர்த்து வைத்திருப்பதால் எப்படியும் தங்களுக்கு ஆகிவிடுமென்று தைரியம் பேசலாம். ஆனால் அடுத்த தேர்தல் வருவதற்குள் அந்த அக்கிரமங்களொழிந்து போகும் என்று நினைக்கின்றோம். எப்படியெனில் அடுத்த தேர்தலுக்குள் 21 வயதுவந்த ஆண் பெண் அத்தனை பேர்களுக்கும், ஓட்டு இருக்கும்படி செய்வதன் மூலம் இந்தக்காரியங்களை ஒழிக்கக்கூடும் அப்பொழுது தான் ஏழைகள் பிரதிநிதிவரக்கூடும். இப்போது பெரிதும் வீடுவாசல், சொத்து, குறிப்பிட்ட வரும்படி உள்ளவர்களுககே இன்றைய தினம் அருகதையும், ஓட்டு உரிமையும் இருந்து வருகின்றது. ஆதலால் சொத்தில்லாதவர்களும் குறைந்த, அதாவது தினம் ஒரு ரூபாய் வரும்படிக்கு குறைந்தவரும்படி உள்ளவர்களும் இன்று மனிதர்களாய் பாவிக்கப் படுவதில்லை என்று சொல்வதோடு பணக்காரர்கள் முனிசிபாலிட்டி, பணக்காரர்கள் ஜில்லா போர்டு, பணக்காரர்கள் சட்டசபை, பணக்கார மந்திரி பணக்கார சர்க்கார் என்று சொல்லும் நிலைமை மாற்றி ஏழைகள் முனிசிபாலிட்டி, ஏழைகள் சர்க்கார் என்பதாகச் சொல்லக் கூடிய நிலைமை ஏற்படத்தக்க மாதிரியில் அதற்குத்தக்க அபேக்ஷகர்களுக்கு ஓட்டுச் செய்யுங்கள் என்றும், பணம் வாங்கக்கூடாது என்றும் ஓட்டர்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# வேலையில்லாத் திண்டாட்டம்.

செல்வம் பொழியும் அமரிக்கர் தேசத்தில் இன்று கோடிக்கணக்கான மக்கள் வேலை இல்லாமல் கஷ்டப்படுவதுடன், 10 லக்ஷக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துபொருத்த கலவரம் ஏற்பட்டு இருக்கிறது.

இந் நிலையில் அமரிக்க குடிஅரசு தலைவர் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக ஒரு காரியம் செய்து வருகிறார். அதாவது தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைத்து அதிக தொழிலாளிகளுக்கு வேலை ஏற்படும்படிசெய்துவருகிறார். எப்படியெனில் ஒரு தொழில்சாலையில் ஒரு தொழிலாளி வாரத்துக்கு 40 மணிநேரம் வேலை செய்துவந்ததை இப்போது மாற்றி வாரம் ஒன்றுக்கு ஒரு தொழிலாளி 36 மணி நேரம் வேலை செய்தால் போதும் என்றும், பழய கூலியே கொடுக்கப்பட வேண்டும் என்றும் உத்திர விட்டுவிட்டார்.

அதன் பயனாக ஒரு மாகாணத்தில் பருத்தி இயந்திரத் தொழில் இலாக்காவில் மாத்திரம் 10000 பதினாயிரம் பேருக்கு புதிதாக வேலைகொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோல் இன்னும் அநேக இலாக்காவில் ஏற்பாடு செய்வதன்மூலம் பல லக்ஷக்கணக்கான பேர்களுக்கு வேலை ஏற்பட்டு விடுமாம்.

ஆனால் நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கதர்திட்டம் போடப்பட்டு பொதுஜனங்கள் பணத்தைக் கோடிக்கணக்காக வசூலித்து பாழாக்கப்படுகிறது. இதுவரை வசூலித்த சுமார் 2கோடி ரூபாய்களைக் கொண்டு குறைந்த அளவு சுமார் 50 மில்லுகளாவது கட்டப்பட்டிருக்குமானால் அதைக்கொண்டு ஒரு லக்ஷம் பேருக்கு நிரந்தர வேலை கொடுத்து இருக்கலாம் என்பதோடு அவற்றின் லாபத்தால் வருஷம் 2 மில்கள் கட்டப்பட்டு அதிலும், வருஷ வருஷம் 2000, 3000 பேருக்கு வேலை கொடுத்துக்கொண்டே வந்திருக்கலாம். இதனால் வேலை இல்லாப் பஞ்சம் நீங்குவதோடு 12 மணி நேரம் நூல் நூற்றால் 12 தம்பிடி வரும்படி வரக்கூடிய கேவலத்தன்மை நீக்கிக் குறைந்த அளவு மாதம் 1-க்கு 10 ரூபாய்க்கு குறையாத வரும்படியையும், தொழிலாளிகள் அடைந்து வரலாம்.

இந்தப்படி செய்தால் பணக்கார முதலாளிகளினுடையவும், பார்ப்பனர்களுடையவும் ஆதரவு தோழர் காந்தியாருக்கோ காங்கிரசுக்கோ இல்லாமல் போய்விடும். ஆதலால் "காந்தியும், காங்கிரசும்" உள்ளவரை வேலை இல்லாத் திண்டாட்டம் நீங்கிவிடும் என்று எண்ணுவது கொள்ளிக்கட்டையை எடுத்து தலையை சொரிந்துகொள்ளுவது போலவே முடியும்

## சென்னை சட்ட சபை.

### ஒரு வருடத்துக்கு ஆயுள் நீடிப்பு.

### கவர்னர் அறிக்கை.

சர்க்கார் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்:—

இந்திய அரசியல் முறைச்சட்டம் 72 பி. பிரிவின் 1-வது உப பிரிவின் இனத்தின் பி. விதிப்படி அளிக்கப்படும் அதிகாரத்தைக் கொண்டு ஜார்ஜ் பிரடிரிக் ஸ்டான்லியாகிய நான் வரப்போகும் அரசியல் அமைப்பு மாறுதல்கான உத்தேசித்தும், புதிய சட்டசபை அதனுடைய முழு ஆயுட்காலம்வரை இருக்கமுடியாதென்பதைக் கருதியும், என்னுடைய சட்டசபையின் ஆயுள் காலத்தை 1935ம் வருடம் நவம்பர் மாதம் 6-ம் தேதிவரை நீடிக்கச்செய்கின்றேன்.

## ஜனனம்.

திருவாரூர் தோழர் கனகாம்புஜம் இராமன் அவர்களுக்கு 26—8—34 ஞாயிறன்று ஓர் ஆண் மகவு ஜெனித்தது. தாயும், பிள்ளையும் சௌக்கியமாக இருக்கிறார்கள்.

# ஈரோடு முனிசிபாலிட்டிக்குப் பாராட்டு.

ஈரோடு முனிசிபாலிட்டியானது ஒரு பத்து வருஷகாலம் பொருப்பும், நாணயமும் இல்லாமல் லஞ்சம், திருட்டு, புரட்டு, பொய், போர்ஜரி முதலிய குணங்களை அணிகலமாகக் கொண்டு நடந்து வந்ததும், அதன் பயனாக நிர்வாகமும், செல்வ நிலையும் மிகக்கேவலமாய் இருந்து வந்ததும், அவ்வப்போது வெளியான விஷயங்களில் இருந்தும், சர்க்கார் கணக்குப் பரிசோதகர்கள் அறிக்கைகளில்இருந்தும், அரசாங்கத்தார் நிர்வாக அறிக்கைக்குறிப்புகளிலிருந்தும், பொது ஜனங்களும், சிறப்பாக ஈரோடு வாசிகளும் உணர்ந்திருக்கலாம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த 10, 15 வருஷகாலமாய் அரசாங்கத்தார் முனிசிபாலிட்டிக்குள்ள அதிகாரங்களையும், கவுன்சிலர்களுக்கும், சேர்மென்களுக்கும் உள்ள அதிகாரங்களையும் நாளுக்கு நாள் குறைத்து வந்ததோடு, சில அதிகாரங்களை அடியோடு பறித்துக்கொண்டதற்கும் முக்கியமாக ஈரோடு முனிசிபாலிட்டியின் நடத்தையே காரணமென்று சொல்லலாம்.

அவைமாத்திரமல்லாமல் முனிசிபல் ஆபீஸ் நிர்வாகங்கள் சேர்மென்கள் கையிலிருந்தவைகளையும் பிடுங்கிக்கொண்டு அவற்றை நிர்வகிப்பதற்கு மாதம் 60, 70, 100, 150 ரூபாய் சம்பளமுள்ள சாதாரண சிப்பந்திகளை நிர்வாக உத்தியோகஸ்தர்களாக நியமித்து அவர்கள் வசம் நிர்வாகங்களை ஒப்படைக்க நேர்ந்ததற்கும் ஈரோடு முனிசிபாலிட்டியின் நடத்தையே முதல் காரணம் என்றும் சொல்லலாம்.

இவை மாத்திரமல்லாமல் ஈரோடு டவுனுக்கு மின்சார விசை—விளக்கு' சப்ளை திட்டத்தை ஈரோடு முனிசிபாலிட்டிக்கு கொடுக்காமல் சர்க்காரார் ஒரு பிரைவேட் வியாபாரக் கம்பெனிக்கு லைசென்சு கொடுக்க நேர்ந்ததும் "ஈரோடு முனிசிபாலிட்டியாரின் நடத்தையே காரணம்" என்று சுமார் 3வருஷங்களுக்கு முன் முதன் மந்திரிஈரோட்டிற்கு வந்திருந்த போது சொன்னதும் யாவரும் அறிந்திருக்கலாம்.

இவ்வளவு கேவல நிலையிலும், இழிவான நிலையிலும் இருந்து வந்த முனிசிபாலிட்டியானது கொஞ்சகாலமாய், சிறப்பாய் தோழர் K. A. ஷேக்தாவுத் சாயபு அவர்களை சேர்மெனாக அமைந்த காலம் முதல் கொண்டு அதன் மோசமான நிலைகள் எல்லாம் மாறி நாளுக்கு நாள் கௌவுன்சிலில் ஒற்றுமையும், கூட்டுறவும் ஏற்பட்டு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து இன்றைய தினம் சென்னை மாகாணத்திலேயே சிறப்பாகவும், முதன்மையாகவும், திறமையாகவும் இருந்து வரும் வெகு சில அதாவது ஒரு நாலைந்து முனிசிபாலிட்டிகளில் ஒன்றாக இருந்து வருவது அரசாங்க நிர்வாக அறிக்கையிலிருந்து அறியலாம்.

இந்த 3, 4 வருஷங்களாகவே அரசாங்கத்தார் ஈரோடுமுனிசிபல் நிர்வாக அறிக்கையின் மீது தங்கள் அபிப்பிராயங்களை எழுதி வருவதில் ஒவ்வொரு வருஷமும் "முன்னேற்றம் அடைந்து வருகின்றது" "வெகு என்றும் திருப்திபாய் இருக்கின்றது" என்றும் "மகிழ்ச்சி அடையத்தக்க நல்ல நிர்வாகம்" என்றும் எழுதி வந்திருப்பதுடன் கடைசியாக சென்ற வருஷத்யமாகாண எல்லா முனிசிபாலிட்டிகளின் நிர்வாகங்களைப்பற்றியும், அரசாங்கத்தார் எழுதிய பொது நிர்வாக அறிக்கை மீதும் ஒவ்வொரு முனிசிபாலிட்டியைப் பற்றியும் குறிப்பிடுகையில் கோயமுத்தூர், கொடைக்கானல், குன்னூர், ஒட்டகமண்ட் ஆகிய 4முனிசிபாலிட்டிகள் தான் இந்த மாகாணத்தில் பாராட்டுதற்குரிய விதமாய் எல்லாத்துறையிலும் முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இந்த வருஷததல் மேற்கூறிய நான்கு முனிசிபாலிட்டிகளுடன் ஈரோடும் சேர்ந்திருப்பதானது, அதாவது எல்லாத் துறைகளிலும் மேன்மையாயும், திறமையாயும் ஈரோடு முனிசிபல் நிர்வாகம் நடந்து அவைகளோடு சேர்க்கத் தகுதி பெற்றிருப்பதானது அரசாங்கத்தாருக்கு மிகுதியும் மகிழ்ச்சியளிக்கின்றது என்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எவ்வளவோ மோசமாகவும், கெட்ட பெயருடனும் இருந்து வந்த முனிசிபாலிட்டியானது இவ்வளவு மேன்மையும், நல்லபெயரும் அடைந்திருப்பதற்குக்காரணம் அதற்குக் கிடைக்கப்பெற்ற தலைவர் தோழர் K. A ஷேக்தாவுத் சாயபு அவர்களின் ராஜதந்திர புத்தியும், நிர்வாகத்திறமையும் காரணம் என்று சொல்வதோடு, இவர் காலத்தில் முனிசிபாலிட்டிக்குக் கிடைத்த கவுன்சிலர்களுடைய மதிக்கத்தகுந்த கூட்டுறவும், ஆலோசனையும், ஒத்துழைப்பும் காரணம் என்பதையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

இந்த முனிசிபாலிட்டியில்தாழ்த்தப்பட்ட வகுப்பார் விஷயத்தில் கூடுமான வரை சலுகை காட்டிவரப்பட்டிருப்பதுடன், பெண்கள் விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதுஎன்பதையும் நாம் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

தாழ்த்தப்பட்ட சமூகம்என்று சொல்லப்படும் வகுப்பைச் சேர்ந்திருந்த ஒரு பெண்ணுக்கு வாக்ஸ் நேட்டர் (அம்மைகுத்தும் வேலை கொடுக்கப்பட்டிருக்கின்ற காரியமானது இம்மாகாண முனிசிபாலிட்டிகள் எதிலும்செய்யாத காரியம் என்றே சொல்லலாம்.

முடிவாக இவற்றோடு ஒரு நல்ல முனிசிபாலிட்டி செய்ய வேண்டியஎல்லாவேலைகளும்செய்யப்பட்டு விட்டதாக நாம் சொல்லி விட முடியாது. இன்னமும் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருந்து வருகின்றன. முக்கியமாய் சுகாதார விஷயமும், தாழ்த்தப்பட்ட மக்களாகிய தீண்டப்படாதார், பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களின் வைத்தியம், மருத்துவம், பிள்ளைவளர்ப்புமுதலாகிய துறைகளில் செலுத்தப்படவேண்டிய கவனம் இன்னும் அதிகம்பாக்கி இருக்கின்றது என்பதைகுறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

கவுன்சிலர்களுடைய கூட்டுறவும், உறுதியான எண்ணமுமிருந்தால் இன்னும் அநேக காரியங்கள் செய்து இந்த மாகாண முனிசிபாலிட்டிகளுக்கும், ஜில்லா போர்டுகளுக்கும் வழிகாட்டியாக நமது ஈரோடு முனிசிபாலிட்டி இருந்து வரக்கூடும் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

---

# சர். ஷண்முகம்.

## சென்னையில் வறவேற்பு

இந்திய சட்டசபைத் தலைவர் சர். ஷண்முகம் அவர்களும், அவருடைய மனைவியாரும் நேற்று மாலை பம்பாய் எக்ஸ்பிரஸில் சிம்லாவிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார்கள். சென்னை ஷெரிப் திவான் பகதூர் பாலசுந்திரம்நாயுடு, சர்க்கார் உள்நாட்டு மந்திரி தோழர்கள் ஏ. டி. பன்னீர் செல்வம், மந்திரி பி. டி. ராஜன், என். சிவராஜ் முதலிய ஏராளமான பிரபலஸ்தர்களும், நண்பர்களும், நகரவாசிகளும் ஸ்டேஷனில் கூடி சர். ஷண்முகம் அவர்களுக்கு மாலைசூட்டி குதூகலமாக வரவேற்றார்கள். சர். ஷண்முகம் அவர்களும், அவர் மனைவியாருக டாக்டர் பி, வரதாராஜுலு அவர்களின் விருந்தினராயிருந்து வருகிறார்கள். நாளை இரவு கோயம்புத்தூருக்குப் பிரயாணமாகின்றனர்.

## பொன்மலை சுயமரியாதைச் சங்கம்.

4-9-34- மாலை 6 மணிக்கு சங்கக்காரியாலயத்தில் ஷைசங்க பொக்கிஷதார் தோழர் P. V. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் ஓர் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேறப்பெற்று. கூட்டம் இரவு 8 மணிக்கு முடிந்ததது.

ஈரோடு, ஜோலார்பேட்டை மாயவரம்முதலியஇடங்களிலிருந்து, முறையேவெளிவரும் "பகுத்தறிவு" "சமதர்மம்", "வெற்றிமுரசு" ஆகியமூன்று பத்திரிக்கைகளையும் இக்கூட்டம் வரவேற்கிறது.

16 9-34ல் திருச்சிக்கு விஜயம் செய்யும் நமது இயக்கத்தலைவர் தோழர், E. V. ராமசாமி அவர்களையும் மற்றும் பல தோழர்களையும் கொண்டு வந்து இப்பொன்மலையில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்திய சட்டசபைத் தேர்தலில் சேலம், கோயம்புத்தூர், வட ஆற்காடு தொகுதியில் தமிழ்நாடு ஆசிரியர் தோழர் டாக்டர் பி. வரதாராஜுலு அவர்கள் அபேட்க்ஷகராய் நிற்பதை இக்கூட்டம் ஆதரிக்கிறது. என பொன்மலை சுயமரியாதைச்சங்க காரியதரிசி எழுதுகிறார்.

## சுயமரியாதைத் திருமணம்.

சென்னை தோழர் M. K. அழகப்பா அவர்களுக்கும், தோழர் பௌனம்பாளுக்கும் திருச்சி புரோகிதமறுப்பு சங்கத்தினுதரவில் திருச்சியில் தோழர் E. V. ராமசாமி அவர்கள் தலைமையில் 16—9—34-ல் சுயமரியாதை முறையில் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நடைபெறும்.

# இதுதானா தேசியம்?

தோழர் ஈ. வெ. ராமசாமி.

மத விஷயங்களிலுள்ள குற்றங்களும், கொடுமைகளும், ஒழுக்கக் குறைவுகளும் தேசிய விஷயத்தில் இல்லையென்று யாராலும் சொல்ல முடியாது.

பொதுவாகவே தேசியம் என்னும் வார்த்தையே அர்த்தமற்றது என்றும், மோசக்கருத்துக்கொண்டது என்றும், அதில் பணக்காரத்தன்மை பிரதிபலிப்பதோடு பணக்காரத்தன்மையை ஆதரிப்பதற்கென்று கற்பிக்கப்பட்டதென்றும் பல தடவை கூறி வந்திருக்கிறோம்.

நாம் மாத்திரமல்லாமல் பல மேல்நாட்டு அறிஞர்களும் தேசியத்தின் தன்மையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜான்சன் என்கின்ற ஒரு மேதாவி "தேசியம் (தேசாபிமானம்) என்பது வடிகட்டின அயோக்கியத்தனம்" என்று அதாவது "பிழைப்புக்கு வழியில்லாதவர்களின் கடைசியான இழிபிழைப்புக்கு மார்க்கமானது" என்று கூறி இருக்கிறார்.

இந்த அபிப்பிராயம் முதல் முதல்தேசியம், தேசாபிமானம் என்கின்ற வார்த்தைகள் எங்கு உண்டானதோ, அங்கு ஏற்பட்ட அபிப்பிராயமே தவிர இந்தியாவில் "தேசியவிரோதிகள்" "தேசத்துரோகிகள்" "சர்க்கார் குலாம்கள்" என்று "தேசாபிமானி"களால் கருதப்படுகின்றவர்களால் சொல்லப்பட்டதல்ல. இது எப்படியோ இருக்கட்டும் என்று வைத்துக் கொள்ளுவோம்.

இன்று இந்திய தேசியவாதிகள், தேசாபிமானிகள் தேசியத்துக்கும், தேசாபிமானத்துக்கும், பத்திரிகை நடத்தும் பத்திராதிபர்கள், தேசாபிமானத்தில் வயிறு வளர்க்கும் பிறவி—வாழ்க்கை தேச பக்தர்கள் என்பவர்களைப் பற்றி சற்று கவனிப்போம். இன்று இந்தியாவில் இந்திய சட்டசபைக்கு தேர்தல்கள் நடக்கின்றன. இது ஒரு அரசியல் விஷயம்.

இந்திய சட்டசபை அரசியல் மூலம் ஜாதிய சம்மந்தமான— மனித சமூக வாழ்வு சீர்திருத்த சம்பந்தமான அதாவது ஜாதி, மத, பழக்க வழக்க, சம்மந்தமாக ஒரு காரியமும் செய்யமுடியாது. முடியும் என்றாலும் தேசியவாதிகள்தேசாபிமானிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்கிறவர்கள் இது விஷயங்களை சட்ட சபைகளில் பேசவோ சட்டம் செய்யவோ ஒப்புக்கொள்ளுவதில்லை. ஒப்புக்கொள்வதனாலும் தேசமெல்லாம் ஒரே அபிப்பிராயமாய் அந்தந்த மத ஜாதிக்காரர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்கதாய் இருக்கவேண்டும் என்கின்றதான ஆகாத நிபந்தனைகளையெல்லாம் சொல்லுகின்றவர்கள்.

இந்திய தேசாபிமானம் எனபதே இன்று இந்த தேச பணக்காரர்களுடைய சௌகரியங்களைக் குறிப்பாய்க் கொண்டதும், பணக்காரர்கள் பணவருவாய் முறையை சிறிதும் மாற்ற முடியாததும், பணக்காரர்களுக்கு பணம் பெருகிக்கொண்டு, வளர்ந்து கொண்டு போவதைத் தடுக்க முடியாததும் தேச செல்வம் எல்லாம் ஒருவன் கைக்கே போவதானாலும் ஆக்ஷேபிக்க முடியாததுமான கொள்கை தான் (தேசாபிமானத்தில்) இருந்து வருகிறதேதவிர தேசம் தேசமக்களுக்குப்பொது-- தேசத்தின் செல்வம்,விளை பொருள்,வர்த்தகம், போக்குவரத்து, தொழில் சாலை ஆகியவைகளின் பலன்கள் இந்ததேசத்து எல்லா மக்களுக்கும் பொது என்று சொல்லக்கூடிய காரியங்கள் தேசபிமானத்தில் இல்லவும் இல்லை. அதை அதில் சேர்த்துக்கொள்ள மகாத்மாக்கள் என்பவர்கள்முதல் எந்த தேச பக்தர்களும் சம்மதிப்பதும் இல்லை. இப்படிப்பட்ட யோக்கியதையுள்ள நபர்கள் தங்கள் சேர்ந்துள்ள ஸ்தாபனத்தையும், தாங்கள் சொல்லும் கொள்கைகளையும், தேசாபிமானம் என்று சொல்லிக்கொண்டு இருப்பதாலேயே தங்களை தேசாபிமானிகள் என்றும், தங்களோடு சேராதவர்கள் எல்லாம் தேசாபிமானிகள் அல்ல என்றும், தேசத்து ரோகிகள் என்றும், தங்கள் ஸ்தாபனம் தான் குதிரைக்கு சமானமானது என்றும், மற்றதுகள் கழுதைக்குச் சமானமானது என்றும் சொல்லுகிறார்கள். இதனாலேயே தேசாபிமானம் என்பது வடிகட்டிய அயோக்கியத்தனம் என்றும, அதில் வாழ்கின்றவர்கள் உலகிலுள்ள பிழைப்புகளில் எல்லாம் மிக இழிவான பிழைப்பில் பிழைக்கின்றவர்களாவார்கள் என்றும் சொன்ன சொல்லைப் பொன்னே போல் போற்றி பொன் எழுத்தில் எழுதி சொன்னவரை பொன்னேபோல் வாழ்த்த வேண்டாமா என்று கேள்க்கின்றோம்.

இன்று சிறப்பாக இந்த நாட்டில் தன்னை ஒருவன் தேசாபிமானி என்று சொல்லிக்கொண்டாலோ, அல்லது அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து கொண்டாலோ, அல்லது வேறு வழியில்லாமல் அதன் பயனாய் வாழ்வை நடத்த ஆரம்பித்து விட்டாலோ, அவன் எவ்வளவு அயோக்கியனாய் இழிபிறப்பாய், ஒழுக்கங்கெட்டவனாய், இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் மேடை ஏறவும், வாயில் வந்ததைப் பேசவும், மனதில் நினைத்ததை எழுதவும், பொய் பித்தலாட்டம் போக்கிரித்தனங்கள் செய்யவும் யோக்கியதைகள் ஏற்பட்டு விடுவது என்றால் இப்படிப்பட்ட தேசாபிமானத்தையும், தேசியத்தையும், தேசபக்தியையும் வெட்டிப் புதைக்கவேண்டாமா என்று கேட்கின்றோம்.

அதற்காக உயிர்போகுமளவும் பாடுபட்டு-அதற்காக உயிர்விட் நேரிடுவதைப் பெரியதொரு கிடைத்ததற்கரியதொரு காரியம் என்று கருத வேண்டாமா? என்று கேட்கின்றோம்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் நமது பாராட்டுதலுக்குரியவர் என்றே கருதுகின்றோம். (நமது பாராட்டுதலை அவர் லக்ஷியம் செய்யாதிருந்தாலும் இருக்கலாம்)அவரை உண்மைத் தியாகிகளில் ஒருவராகவே கொள்ளலாம். அவரது நிலைமையைப்பார்த்தும் அவர்தேசாபிமானத்தால் பிழைக்க வேண்டிய அவசியமில்லாதவர் என்றே கூறுவோம்.

அதோடுகூடவே ஒவ்வொருவருக்கும் அவரவர்கருதும்வழியில் தொண்டாற்ற, தியாகம் செய்ய உயிர்விட அவரவருக்கு உரிமை உண்டு என்பதையும் நாம்ஒப்புக்கொள்ளுகிறோம்.

என்றாலும்காங்கிரஸ் "ஒன்றுதான் தேசாபிமான ஸ்தாபனம். காங்கிரஸ்காரர்கள் தான் தேசாபிமானிகள்" என்று சொல்லுவதும் "எவ்வளவு தான் ஒரு மனிதன் தனிப்பட்ட முறையில் சொந்த வாழ்வில், எவ்வளவு அயோக்கியனாய், ஈனனாய் இருந்தாலும் அவன் காங்கிரசில் சேர்ந்து விட்டால் அவன் யோக்கியனாய் விடுவான்" என்றும், அவனை யோக்கியனாகக்கருத வேண்டும்" என்றும் சொல்ல முன் வந்துவிட்டாரானால் பிறகு இவரைப்பற்றி என்ன சொல்லுவது என்பது நமக்குப்புரியவில்லை.

ஒரு சிட்டிகைச் சாம்பலை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டால் பெற்ற தாயாரைப்புணர்ந்த பாபம் நாசமாகி சிவனுடைய பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளலாம், என்றும், "ஒருதடவை ராமா என்றால் பல "ஜன்ம" பாபங்கள் தீர்ந்து வைகுண்டம்சேரலாம்" என்றும் சொல்லும் வாக்கியங்களுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்று கேழ்க்கின்றோம். இதனால் தான் இத்தேசத்தில் உள்ள அயோக்கியர்கள் இழிதொழிலாளிகள்ஆகிய எல்லோரும் தாங்கள் யோக்கியர்களாகக் கருதப்படலாம் என்று காங்கிரசில் வந்து சேருகிறார்கள் போலும்.

நாலணா கொடுத்து காங்கிரசில் சேர்ந்து விடுவதினால் ஒரு மனிதன் யோக்கியனாகி விடலாம். என்று ராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள் வாயினால் சொல்லப்பட்டு விடுமானால் மனிதன் அயோக்கியனாக, ஒழுக்க ஈனனாக, நாணய மற்றவனாக இழி வாழ்க்கைக்காரனாக வாழப் பயப்படுவானா? என்று தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களை வணக்கமாக கேள்க்கின்றோம். தோழர் ராஜகோபாலாச்சாரியார்அவர்கள்தொண்டும், நமது தொண்டும் பார்ப்பனர் நன்மை, பார்ப்பனரல்லாதார் நன்மை என்கின்ற தத்துவங்களின் போட்டித் தொண்டு என்று மாத்திரம் நாம் கண்ணியமாய் எண்ணி இருந்த எண்ணம், இப்போது அயோக்கியர்-யோக்கியர் என்கின்ற விஷயத்திலும் போட்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

## அறிக்கை.

நமது "புரட்சி" பத்திரிக்கைக்கு சர்க்காரால் இரண்டாயிரம் ரூபாய் ஜாமீன் கேட்கப்பட்டு நிறுத்தப்பட்ட பின் சென்ற 26-8-34ந் தேதியிலிருந்து "பகுத்தறிவு" என்னும் பெயரோடு ஒருவார பத்திரிகையை வெளியிட்டு வருகிறோம். ஆனால் அதற்கு போஸ்டல் ஆர்டர் இதுவரை கிடைக்காதிருந்ததால் நமது சந்தா நேயர்களுக்கு அனுப்ப முடியவில்லை. இவ்வாரத்தில் தான் ஆர்டர் கிடைத்திருக்கிறது. இனி தவறாது நமது சந்தா நேயர்களுக்குப் பேப்பர் கிடைக்குமென தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்
பகுத்தறிவு ஈரோடு

# பகுத்தறிவு.

ஈரோடு 1934- செப்டம்பர் 9-உ

## மதம் ஏன் ஒழியவேண்டும்?

மதம் என்பதைப்பற்றி இதற்குமுன் "குடி அரசு", "புரட்சி" முதலிய பத்திரிகைகளில் அநேக வியாசங்கள் பல தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும்.

மதமானது இன்று உலகில் மனித சமூகத்தின் வாழ்வைத் துக்கமயமாக்கி, ஜீவராசிகளில் மனிதனுக்கென்று உள்ள பகுத்தறிவை அடிமைப்படுத்தி, ஒற்றுமையைக் குலைத்து மனிதனுக்கு மனிதன் வெவ்வேறு இனம் என்று எண்ணும்படி செய்து வருகின்றது என்பதற்கு உதாரணம் தேவையில்லை என்றே கருதுகின்றோம்.

"தேசிய சிங்கங்"களான அலி சகோதரர்கள் ஒரு காலத்தில் "நாங்கள் முதலில் மகம்மதியர்கள் பிறகுதான் இந்தியர்கள்" அதாவது முதலாவது மதம், பிறகு தான் தேசம் என்றும், "உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா" காந்தி "நானே இந்து மதத்தின் உருவம்! நான் மூச்சுவிடுவதும், வாங்குவதும் இந்துமதத்திற்காகவே!! நான் உண்பதும், உயிர் வாழ்வதும் இந்து மதத்திற்காகவே"!!! மதத்தைக்காக்கவே நான் சுயராஜ்யம் கேட்கின்றேன்!!!! அதாவது இந்து மதம்தான் எனக்கு முதலும் கடைசியும், என்றும், "பழைய காங்கிரஸ்வாதி, மாசற்ற தேசாபிமானி, ஒப்பற்ற தியாகி" என்று சொல்லப்பட்ட பண்டித மதன்மோகனமாளவியா "எனது மதத்தையும், எனது ஜாதியையும் காப்பதே எனது முதல் வேலை" என்றும் அதாவது வருணாச்சிரமத்தைக் காக்கத்தான் நான் தேசியவாதி என்றும் சொல்லும்படி செய்துவிட்டது என்றால் மதத்தின் ஆதிக்கத்திற்கு வேறுஎன்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

பெருத்த தேசாபிமானிகள், தேசத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்கள் என்று சொல்லும்படியான இவர்களே அவரவர்களின் மதத் தத்துவத்தை உள் எண்ணமாக வைத்து அவற்றின் கொள்கைகளைக் காப்பதற்காகவே அவர்களது தேசாபிமானமும், உயிர் வாழ்வும் இருந்துவருகின்றது என்றால் மற்ற சாதாரணமான அதாவது மதத்தைத் தவிர மற்றொன்றும் அறியாத பாமர மக்களின் யோக்கியதையைப்பற்றி நாம் விளக்கவேண்டுமா என்று கேட்கின்றோம்.

வட்டமேஜை மகாநாடு உடைந்து போனதும், அரசியல் சீர்திருத்தத்தில் இந்திய மக்கள் ஒன்றுபடாமல் போனதும், இந்து முஸ்லீம்கள் ஒருவரை ஒருவர் நம்பாமல் அரசியலில் தனித்தொகுதி வேண்டுவதற்கும், காங்கிரசும் முஸ்லீம்லீக்கும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதற்கும், தீண்டப்படாத மக்கள் தனித்தொகுதி கேள்ப்பதற்கும் கூட்டுத்தொகுதியில் தனிப்பிரதிநிதித்துவம் ஒதுக்கப்படவேண்டும் என்று கேள்ப்பதற்கும், மக்களை மக்கள் தீண்டப்படாதாராய் கீழ்மேல் ஜாதியாராய் கருதப்பட்டு வருவதற்கும் மதமே காரணமாய் இருந்து வருகின்றது என்பதையும் எவராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் மனித சமூக வாழ்வுக்கு ஏற்ற சீர்திருத்தங்கள், முன்னேற்றங்கள் என்பவைகளில் பெரும்பான்மையான மக்களால் அவசியம் என்றும், அறிவுக்கு ஏற்றது என்றும் கருதப்படும் அநேக விஷயங்களைப்பற்றி சட்டங்கள் செய்யவோ, சட்டங்கள் செய்தாலும் அமுலுக்குக்கொண்டுவரவோ தடையாய் இருந்து வருவதற்கு மதங்களே காரணமாக சொல்லப்படுகின்றதா இல்லையா என்று கேட்கின்றோம். ஆகவே மனிதவாழ்க்கைக்கு மதங்கள் இதைவிட வேறு என்ன கொடுமைகள் செய்யவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

இப்படிப்பட்ட இந்த மதம் ஒன்று இரண்டு என்று இல்லாமல் நூற்றுக்கணக்காய் இருந்துகொண்டு பலவித கடவுள்களை சிருஷ்டித்து பலவித மேல்உலகங்களையும் மோக்ஷ நரகங்களையும் கற்பித்து அவரவர்கள் கடவுள்களுக்குத் தனிப்பட்ட குணங்களும், அவரவர்கள் மேல் உலகங்களுக்கு தனிப்பட்ட பூகோளங்களும், அவரவர்கள் மோக்ஷ நரகங்களுக்குத் தனிப்பட்ட வருணனைகளும் கற்பித்து மக்களை மயக்கி வருவதோடு வாழ்க்கை, ஒழுக்கம், நடத்தை என்பவைகளும் அவரவர் மதத்துக்கு ஒவ்வொரு விதமாய் கற்பிக்கப்பட்டு நடந்து வருவதும் அறிஞர்கள் அறியாததா.?

இப்படிபபட்ட மதத்தை மக்களுக்குள் பிரசாரம் செய்வதற்காக ஒரு சில நபர்கள் பாதிரி என்றும், முல்லா என்றும், தம்பிரான் என்றும், சங்கராச்சாரி என்றும் ஜீயர் என்றும், சாமியார் என்றும், பெயர்கள் வைத்துக்கொண்டு, உலக செல்வத்தில் தனிப்பெரும் பாகத்தை வீணாக்கி மக்களுக்கு போதை ஊட்டி வருவதானது எவ்வளவு அவிவேகமான காரியம் என்பது சுய அறிவோடு பரிசுத்த தன்மையில் இருந்து யோசிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது

இவைகளைப் பற்றி இன்னமும் விவரிக்கு முன் மதம் என்றால் என்ன என்று நாம் கருதிக்கொண்டு அதைப்பற்றி இவ்வளவு எழுதுகின்றோம் என்பதை வாசகர்களுக்கு விளக்க ஆசைப்படுகின்றோம்.

1. மதம் என்பது இவ்வுலக மானிட வாழ்வுக்கு ஏற்ற சட்ட திட்டங்கள் என்று சொல்லப்படுமானாலும்.

2. அல்லது மதம் என்பது இவ்வுலகில் மக்கள் கூடி வாழ்வதற்கு ஏற்ற "ஒழுங்கு முறைகளை"க்கொண்டது என்று சொல்லப்படுமானாலும்.

3. அல்லது (ஒருவர் கூறியபடி) மதம் என்பது மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களை காட்டுவது என்று சொல்லப்படுமானாலும் அவைகளைப்பற்றியெல்லாம் நாம் அதிகக் கவலைகொண்டு மதங்களை எதிர்க்க ஆசைப்படுவதில்லை.

அப்படிக்கெல்லாம் அல்லாமல்.

1. மதமானது மனிதனுடைய ஜட சம்பந்தத்தை விட்டு விட்டு ஜடம் நீங்கின "ஆத்மா"வைப் பொறுத்ததென்றும்

2. மதமானது இவ்வுலக வாழ்வை இன்ப துன்பத்தை துச்சமாக மதித்துவிட்டு மேலுலக வாழ்வை முக்கியமாகப் பொருத்ததென்றும்

3. மதமானது "கடவுளு"க்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தை விளக்குவதைப் பொருத்ததென்றும்.

4. மதமானது. பஞ்சேந்திரியங்களுக்கு விளங்கக்கூடியவஸ்து என்ற தத்துவத்தை விட்டு பஞ்சேந்திரியங்களாலும் உணர முடியாத "ஆத்மார்த்தம்" ஆகிய தத்துவத்தை அசரீரியை அடிப்படையாகக் கொண்டது என்றும்,

5. மதமானது உலக போக போக்கியம் இன்ப துன்பம் ஆகியவைகளை அலக்ஷியம் செய்து "கடவுளின்" பாதாரவிந்தத்தை அடையவும், "மோக்ஷ" சாம்ராஜ்யத்தைப் பெறவும் ஏற்ற மார்க்கம் என்றும் சொல்லப்படும் மதங்களையும், மத தத்துவங்களையும் பற்றியே நாம் பேசுகின்றோம். என்றாலும் முதலில் கூறப்பட்ட அதாவது.

மதம் மானிட வாழ்க்கைக்கு ஏற்ற சட்ட திட்டங்களுக்கோ மக்களின் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஏற்ற ஒழுங்கு முறைக்கோ ஏற்பட்டது எனகின்ற விஷயங்களிலும் கூட நமது ஆக்ஷேபனையை சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதாவது இன்று நாம் மதங்கள் என்று சொல்லிக்கொள்ளப்படுபவைகளில் மேற்கண்ட குணங்கள் இருக்கின்றதா இல்லையா என்பது ஒருபுறமிருந்தாலும் இந்தக் காரியங்களுக்காக மக்கள் செலவில் நடைபெறும் அரசாங்க நிருவாகமும், சிவில் கிரிமினல் சட்ட திட்டங்களும், அவைகளை நிறைவேற்ற நியாயஸ்தலம் தண்டனை சன்மானம் ஆகிய முறைகளும் இருந்துவரும்போது இவைகள் அல்லாத ஒரு சாதனம் அதாவது மதம் என்கின்ற ஒரு விஷயம் எதற்காக இருக்கவேண்டும்?

அரசாங்கம் சட்ட திட்டம் நீதி நிர்வாகம் தண்டனை, கண்டனை இல்லாமல் மனித சமூகம் எப்படிப்பட்ட மதத்தினாலாவது

கூடிஒழுங்கு முறையுடன் வாழ முடியுமா? என்பதை யோசித்தால் மதம் மேல் கண்ட காரியங்களுக்கு உண்மையாய் பயன் படுகிறதா என்பது விளங்கும். இன்று எந்த தேசத்திலும், எந்த மதத்திலும், எந்தசமூகத்திலும் உள்ள மக்களின் சொத்தும், சரீரமும் காப்பாற்றப்படுவது மதத்தினாலா அரசாங்க சட்டதிட்டங்களினாலா என்பதை யோசித்துப் பார்த்தாலே மதத்தின் காப்பும், நடப்பும் எப்படிப்பட்டது என்பது சுலபத்தில் விளங்கிவிடும்.

மதம் "எல்லா ஜீவராசிகளிடமும் அன்பாய் காருண்யத்துடன் இருக்கவேண்டும் என்று கற்பிக்கின்றது" என்று மதக்காரர்கள் சொல்லக்கூடும் ஆனால் மனிதனைத்தவிர மற்ற எல்லா ஜீவராசிகளையும்பற்றி கவலைப்படாமல் மற்ற ஜீவராசிகளைக்கொல்லவும், தின்னவும், இம்சிக்கவும் தனக்கு இடையூறு என்று கருதினால் அழிக்கவும் செய்கிறான். ஆனால் மனிதனை மாத்திரம் அந்தப்படி செய்வதில்லை. இதற்குக் காரணம் மதமா? அல்லது அரசாங்க சட்டதிட்டமா? என்று கேட்கின்றோம். மனிதனை அந்தப்படி எங்கோ ஒன்று இரண்டு சமயம் செய்வதாக வைத்துக்கொண்டாலும் அதற்காகத் தண்டனையை அடைகின்றான்.

ஆதலால் மதம் எங்கே பொதுவான ஒழுங்கு முறையை ஒழுக்கத்தைக் காப்பாற்றுகின்றது என்று கேட்கின்றோம்.

மதம் மனிதனுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களைக் காட்டுவது என்று சொல்லப்படுவதும் மிகுதியும் பொருத்தமற்றது என்றே கருதுகின்றோம்.

மனிதனுக்கும், மற்ற ஜீவவர்க்கத்துக்கும் உள்ள வித்தியாசம் எந்தத்துறையிலானாலும், அறிய வேண்டுமானால் பிராணி வர்க்கத் தத்துவம் கொண்ட நூல்களைப் பார்த்தால் தாராளமாக மதசம்மந்தம் இல்லாமலே அவைகளைத் தெரிந்துகொள்ளலாம். அப்படிக்கில்லாமல் மதத்தின் மூலம் அறிந்த ஜீவதத்துவங்கள் இன்று சிரிப்புக்கிடமாகத்தான் இருந்து வருகின்றன.

மதம் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் கற்பிக்கின்றது. மிருகங்களை, பக்ஷிகளை, பூச்சிகளை, புல் பூண்டுகளை மனிதனைவிட உயர்வாய் மதிக்கின்றது. ஒரு மிருகத்தை உயர்வாய், ஒரு மிருகத்தைத் தாழ்வாய் கற்பிக்கின்றது. இந்த விஷயங்களுக்கு பிராணி சாஸ்திரமே முக்கியமானதும், சரியானதுமேதவிர மதத்தின் மூலம் அறியக்கூடியதாய் இருக்கும் தன்மை மிகவும் மோசமானதும், மூர்க்கத்தனமானதும், முட்டாள்தனமானதுமென்றே சொல்லுவோம்.

மேல்கண்ட 1, 2, 3 விஷயங்களைப்பற்றியவரையிலாவது மதத்தை ஒப்புக்கொள்ளச் செய்யலாமா என்று பார்த்தாலும்கூட அதுவும் அறிவுக்குப் பொருத்தமற்றதும், மூர்க்கத்தனம் கொண்டதுமான கருத்துக்களால் பாதகமடைகின்றது. அதாவது எந்த மதக்காரனும் தன் தன் மதத்தைப்பற்றிய ஆதாரங்களும், கொள்கைகளுமே எந்த தேசத்துக்கும், எந்தக் காலத்திற்கும் பொருத்தமானது என்றும், அவைகளில் ஒரு முற்றுப்புள்ளி குறிப்புக்கோடுகூட மாறக்கூடாது என்றும், தன் தன் மதத்துக்கு தலைவன் என்பவன் எவனோ அவனே உலக மதத்தலைவனாக இருக்கவேண்டும் என்றும் செய்யப்படும் பிடிவாதங்களும், முரட்டுத்தனங்களும் எந்த மதத்தையும் மனித சமூக வாழ்வுக்கு வழிகாட்டி என்று ஒப்புக்கொள்ள முடியாமல் செய்கின்றது.

ஆகவே மனித சமூக கூட்டு வாழ்வுக்கும், ஒழுக்க முறைக்கும் மதங்களைவிட அரசாங்க சட்டதிட்டங்களையே ஆதாரமாக்கொள்வதுதான் அறிவுடைமை என்று கூறுவோம். அதுதான் இன்று உலகமெங்கும் அனுபவத்தில் இருக்கின்றது என்றும் சொல்லுவோம். ஏனெனில் அவைகளில் காலத்துக்கும், தேசத்துக்கும் ஒத்தபடி அனுபவத்துக்கும் அறிவுக்கும் ஏற்றபடி மாற்றிக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும் உரிமை இருக்கின்றது. மதங்களில் அவை காணவே முடியாது. அப்படி ஏதாவது முயர்ச்சித்தாலும் கலகம், கொள்ளை, கொலை முதலியவைகளை உண்டாக்கி விடுகின்றது.

எனவே இந்த விஷயங்களை அதாவது இந்த உலக பிரத்தியக்ஷ மனித வாழ்வு சம்மந்தப்பட்ட இந்த விஷயங்களே மதத்தின் பயனாக இப்படி இருந்தால் இனி "மேலுலக" மனிதனுடைய கண்ணுக்கும், மனதுக்கும் பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாத விஷயங்களைப் பற்றிய மத போதனைகள் என்ன பயனைக்கொடுக்கக் கூடியதாக இருக்கும்? எப்படிப் பட்டதாக இருக்கும்? என்பதைப்பற்றி நாம் விளக்க வேண்டுமா என்று கேட்கின்றோம்.

மற்றபடி "மதம் சட சம்பந்தத்தை விட்டுவிட்டு ஆத்மாவைப் பொருத்தது" என்று சொல்லப்படுவதைப்பற்றியோ தென்றால் இந்தக்காரணத்துக்காகவே மதங்களை எல்லாம் அடியோடு ஒழிக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

ஆத்மா என்பதை இதுவரை ஒரு மனிதனும் அருத்தத்தோடு உருதிப்படுத்தவேயில்லை.

"4+3=10" என்று சொல்லிவிட்டு அந்தப் பத்தைப்பற்றியே விவகரித்துக்கொண்டிருக்கின்றது போலவே அதாவது "10ஐ யார் யாருக்கு எப்படி எப்படி பங்கிடுவது எங்கு எங்கு வைப்பது என்று வேண்டுமானால் பேசு அதற்குமோ 4+3 எப்படி 10 என்று மாத்திரம் கேட்கக்கூடாது என்கின்றநிலையில் தான் இன்று ஆத்மதத்துவம் இருந்து வருகின்றது.

அதாவது ஆத்மா என்றால் என்ன? அது எப்படி சரீரம் பெற்றது? அதற்கு எப்படி கருமம் ஒட்டிற்று? அதன் நடத்தைக்குக் காரணம் என்ன? அது எப்படி "மோக்ஷம்" போகிறது? அதுஎப்படி மறுபடியும் சரீரம் பெற்று எழுகின்றது? மனித ஆத்மா, மிருக ஆத்மா, பக்ஷி ஆத்மா, புழு பூச்சி ஆத்மா ஆகியவைகளில் உள்ள வித்தியாசம் என்ன? என்பன ஆகியவைகளைப்பற்றி எல்லாம் பேசலாம் விவகரிக்கலாம் வால்யம் வால்யமாக புஸ்தகம் எழுதலாம். ஆனால் ஆத்மா என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? அப்படி ஒன்று இருக்க விஞ்ஞான சாஸ்திரம் (சையன்ஸ்) அல்லது ஜீவதத்துவ சாஸ்திரம் இடம் கொடுக்கின்றதா? என்பதைப்பற்றி யாரும் எவ்வித கேள்வியும் கேட்கக்கூடாது. ஆத்மா இருப்பதாக அவர் சொன்னார், இவர் சொன்னார், மகமது சொன்னார், கிறிஸ்து சொன்னார், கிருஷ்ணன் சொன்னார் புத்தர் சொன்னார்... ......என்று சொல்லி விடுவதும், "ஆத்மாவை நம்பாதவன் கடவுளை நம்பாத நாஸ்திகனைவிட, கேடானவன், மடையன், மட்டி" என்றும் "கடவுளை நம்பாவிட்டாலும் ஆத்மாவை நம்பித்தான் ஆக வேண்டும்" என்று சொல்லி விடுகிறார்களே ஒழிய காரண காரியங்களுடன் அறிவு அனுபவங்களுடன் பேசுகின்றவர்களே காணக் கிடைப்பதில்லை.

இது ஒருபுறமிருந்தாலும் ரூபம் இல்லாதவஸ்து தத்துவமில்லாத—மனதுக்கு புரியாதவிஷயத்துக்காக இவ்வுலக பிரத்தியக்ஷ வாழ்க்கையையும், அடையும் இன்பதுன்பங்களையும் பற்றிய கவலை கூடாது என்றோ அல்லது இக்கவலையைவிட "ஆத்மா" கவலையேப்பிரதான மென்றோ, பெரிதென்றோ சொல்லப்படுமானால் அப்படிப்பட்ட மதத்திற்கு உலகில் மனித ஜீவன்கள் இடம் கொடுக்கலாமா என்று தான் கேட்கின்றோம்.

நிற்க "மதமானது மேல் உலக வாழ்வுக்கு ஆதாரமானது" என்று சொல்லப்படுமானால் முதலாவதாக மேல் உலகம் என்பது என்ன என்பதைப்பற்றி இதுவரை யாராவது, எங்காவது விளக்கி இருக்கிறார்களா என்று கேட்கின்றோம்.

பூகோள சாஸ்திர நிபுணர்கள் பூமியின் கீழ் மனதிற்கு எட்டக்கூடிய அளவுவரையும், பூமியின் மேல் ஆகாய மார்க்கமாக மனதிற்கு எட்டக்கூடிய அளவுவரையிலும் ஆராய்ந்து பார்த்து லக்ஷக்கணக்கான மைல்-(ஏன்)? கோடிக்கணக்கான மைல் தூரம் வரையில் ஆராய்ச்சி செய்து மேல் கீழ் நிலைமையை விளக்கி இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு நிபுணத்துவர்கள் என்கின்ற நிலைமையிலும் அனேக வருஷகாலம் அதற்காகப் பாடுபட்டு உழைத்து அனேக கருவிகளின் உதவியைக் கொண்டு கண்டு பிடித்துச்சொன்ன பிரத்தியக்ஷ அனுபவ—ருஜுப்பிக்கக் கூடிய உண்மைகளே ஒழிய "ஞானதிருஷ்டி" அதாவது ஒரு மனிதனுடைய புத்திக்குத் திடீரென்று தோன்றிய விஷயம் என்று சொல்லப்படுவதுபோல் சொல்லப்பட்டதல்ல. அன்றியும் பள்ளிக்கூடங்களில், அல்லது பூகோள புஸ்தகங்களில் முறையே கற்பிக்கப்படாததும் காணப்படாததுமான விஷயங்களுமல்ல.

அப்படியிருக்கும்போது இந்த பிரத்தியக்ஷ உலக விஷயத்தை விட்டுவிட்டு மேல் உலக விஷயத்தைப்பற்றிப் பேசுவது என்றால் அதில் அடங்கியிருக்கும் மௌடீகத் தன்மைக்கு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இதுவரையில் மனிதன் மேல் உலகத்தை எப்படிக் கண்டு பிடித்தான்? அதன் விஸ்தீரணம், தன்மை என்ன? என்பவைகளைப்பற்றிய உண்மை எதுவும் சொல்லப்படாமல் "முதலில் மேல், உலகத்தை நம்பு; பிறகு எப்படி வேண்டுமானாலும்

அதாவது மோக்ஷம் எப்படிப்பட்டது? நரகம் எப்படிப்பட்டது? தண்டனை எப்படிப்பட்டது? அது யாருக்குச் சொந்தம்? பரமபிதாவா அல்லாவா, வைகுண்ட நாதரா கைலாச வாசரா? யார் அதற்கு எஜமான்? என்பதைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் வாதம் செய்'' என்று கற்பிப்பதாய் இருப்பதைத்தவிர வேறு என்ன உண்மை, அல்லது அறிவுடைமை மேல் உலக விஷயத்தில் இருக்கிறது என்று கேட்கின்றோம்.

அதுபோலவே மதம் ''கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ளசம்பந்தத்தை விளக்குவது'' என்று சொல்லப்படும் வார்த்தையும், அர்த்தமற்றதாகவே இருக்கிறது.

கடவுளைப்பற்றி அதாவது, கடவுள் என்றால் என்ன என்பதைப் பற்றி இதுவரை ஒரு ஆஸ்திகனாவது, அல்லது கடவுள்தன்மைகள் பெற்ற பெரியார்களாவது விளக்கினவர்களே அல்ல.

கடவுள் என்றால் ''கண்ணுக்கும், மனதுக்கும் எட்டாதது, ரூபமும் குணமும் இல்லாதது, சர்வ சக்தி சர்வ வல்லமை சர்வ வியாபகம் உள்ளது என்று சொல்லி விடுவதும், அதைச்சொல்லுகின்றவர்களே அந்தக் கருத்தை நம்பாமல் இருப்பதும் பிறகு அதற்கு முரணாகப் பேசுவதுமான காரியங்களுக்கே இதுவரை கடவுளைப் பற்றிய வாதங்களின் முடிவாய் இருந்து வந்திருக்கின்றன.

மனதுக்குப்படாத கடவுளைப் பற்றி மனிதன் எப்படி எந்த இந்திரியத்தினால் உணர்ந்தான் என்று கேட்டால் அதற்கு பதிலே இல்லை. குணமும், ரூபமும் இல்லாத வஸ்துக்கு செய்கை எது என்று கேட்டால் அதற்கும் பதிலே இல்லை. சர்வசக்தி, சர்வவியாபகம் உள்ள கடவுள் செயலில் நன்மை தீமை, துன்பம்-இன்பம், மேல்-கீழ், சுகம்-துக்கம், மோக்ஷம்-நரகம், எப்படி உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று என்று கேட்டால் அதற்கும் பதில் இல்லை. ''அதைப் பற்றியெல்லாம் யாரும் கேட்கக்கூடாது கடவுளை நம்பித்தான் ஆகவேண்டும். நம்பாதவன் நாஸ்திகன், நம்பாவிட்டால் நரகம். அரச தண்டனை, ஆஸ்திகர்கள் கண்டனை கிடைக்கும்'' என்று மிறட்டுவதும் உருட்டுவதும் தவிர கடவுளைப்பற்றி வேறு விளக்கமே இல்லை.

சர்வ சக்தியுள்ள சர்வ வியாபகமுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான் ஏன் கடவுளை அறிய முடியவில்லை. ஏன் கடவுளை இல்லை என்று சொல்லுகிறேன், என்று ஒருவன் கேட்டால் அது உன்னுடைய அகம்பாவம், உன்னுடைய மடமை, என்னுடைய பாவச்செய்கை என்று சொல்லி கடவுளை விட அவனைப் பெரியவனாக மதித்து இகழ்வதாயிருக்கின்றதே தவிர வேறு சமாதானமில்லை.

இப்படிப்பட்ட தத்துவங்கள் கொண்ட மதங்களைப்பற்றி மக்கள் வேற்றுமை உணர்ச்சிகொண்டு ஒருவரை ஒருவர் வெறுத்து பலாத்காரச் செய்கைகள் செய்து மக்களை துன்புறுத்துவதென்றால் மதத்தை ஒழிக்காமல் இருக்க யாருக்குத்தான் மனம் வரும் என்று கேள்கின்றோம்.

மதத்தின் பயனாக நமது வாழ்வில் எவ்வளவு துன்பங்கள், தொல்லைகள் அடைய நேரிடுகின்றது என்பதை உணர்ந்தால் மேலும் மேலும் மதங்களிடம் வெறுப்புத் தோன்ற இடமேற்படுகின்றதே ஒழிய சிறிதாவது அதைச் சகிக்க இடமே இல்லாமல் இருக்கின்றது.

கிறிஸ்துவ மதத்தைப்பற்றி எழுதினோம் என்பதற்கு குடிஅரசு பத்திரிகை நிறுத்தப்பட்டுப் போயிற்று. மகமதிய மதத்தைப் பற்றி எழுதினதற்காக புரட்சிப் பத்திரிகை நிறுத்தப்பட்டுப் போயிற்று.

இந்து மதத்தைப்பற்றி எழுதுகிறோம் என்பதற்காக தினம் தோறும், நிமிஷம் தோறும் அடைந்து வரும் தொல்லையும் நசுங்குச் சேஷ்டை உபத்திரவங்களும் கணக்கு வழக்கில் அடங்காது. பார்ப்பனர்களை உத்தியோகஸ்தர்களாக கொண்ட போலீஸ் இலாக்கா, போஸ்டல் இலாக்கா, ரயில்வே இலாக்கா, நீதி இலாக்கா, நிர்வாகம் மற்றும் அநேக துறைகளில் கீழே இருந்து ஹைகோர்ட்டு நிர்வாக சபை வரையில் ஆங்காங்குள்ள மதக் காப்பாளர்களான பார்ப்பனர்களால் நாம் அடைந்துவரும் கஷ்டம், சித்திரவதைக்கொப்பாக இருந்து வருகின்றது.

நாம் மாத்திரமல்லாமல் நம்மைப்போல் கஷ்டப்படும் மக்கள் கோடிக்கணக்காக எல்லா மதங்களிலும் இருந்து வருகின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

மதமானது பணக்காரத் தன்மையை பிரதி பலித்துக்கொண்டும், அதை ஆதரித்துக்கொண்டும் இருந்து வருகின்ற சாதனமாய் இருப்பதால் அதற்கு இவ்வளவு ஆதிக்கம் இருந்து வருவதில் அதிசயமில்லை.

ஆதலாலேயேதான் மதங்கள் ஒழிக்கப்படுவதாலேயே மனித சமூகத்துக்கு ஒற்றுமையும், சாந்தியும் ஏற்படும் என்று கருதுவதோடு பணக்காரத்தன்மையின் கொடுமையும் ஒழியுமென்று கருதுகின்றோம்.

சென்ற வாரத்தில் சென்னை கடற்கரையில் நடந்த மதசம்பந்தமான ஒரு முஸ்லிம் கூட்டத்தில் கலகம் ஏற்பட்டு ஒரு முஸ்லீமை ஒரு இந்து குத்திவிட்டானாம். முஸ்லீமும் அதனால் செத்து விட்டான். நாளைய தினம் ''ஒரு கிறிஸ்துவன் அதை விசாரித்து உண்மைகண்டு இந்துவை தண்டிக்கப் போகிறான்.'' என்றாலோ அதில் அதிசயமில்லை ஒரு கிறிஸ்தவன் முகமது நபியைப்பற்றி ஏதோ எழுதிவிட்டால் முகமதியர்களுக்கு ஆத்திரம் வருகின்றதும், ஒரு முகமதியன் கிறிஸ்துவைப் பற்றி எழுதிவிட்டால் கிறிஸ்தவனுக்கு ஆத்திரம் வருவதும் இது போலவே இந்துக்களுக்கும், கிறிஸ்து முகமதியர்களுக்கும் நேருவதும், அதற்காக கொலை, கொள்ளை, கொடுமைகள் நடப்பதுமான காரியங்கள் அதுவும் இன்று நேற்றல்லாமல் ஆயிரக்கணக்கான வருஷங்களாக, அதுவும் இந்தியாவில் மாத்திரம் அல்லாமல் ஐரோப்பா, அரேபியா, ஆப்பிரிக்கா முதலிய எல்லா தேசங்களிலும் நடந்து வருகின்றது என்றால் மதம் மக்களுக்கு கூட்டு வாழ்கையையும், ஒற்றுமையையும், சகிப்புத் தன்மையையும், வாழ்க்கை ஒழுங்குகளையும் ஒழுக்கங்களையும் போதித்து வருகின்றதா? என்று கேழ்க்கின்றோம்.

### மதங்களில் உள்ள ஒழுக்கங்கள்.

இந்து மதமும், இஸ்லாம் மதமும் ஒழுக்கத்தைப் பற்றி போதிப்பதில் ஒன்றுக்கொன்று நானே சிறந்த ஒழுக்கத்தையுடையது—என்று போட்டி போடுகின்றன. ஒழுக்கயீனங்களில் எல்லாம் மிகக் கேடானதாக, குற்றங்களில் எல்லாம் மிக இழிவான குற்றமாகவும் கருதப்படும், குற்றமாகிய பெண்களைப் பலாத்காரம் செய்து கற்பழித்தல், மானபங்கம் செய்தல் என்னும் குற்ற விஷயத்தில் இரு மதஸ்தர்களும் வங்காள மாகாணத்தில் எப்படி நடந்திருக்கின்றார்கள் என்பதைக்காட்ட ''மாடர்ன் ரிவியூ'' பத்திரிகையில் வெளியாகி உள்ள ஒரு புள்ளி விபரத்தை இங்கு குறிப்பிட்டுவிட்டு இதை முடிக்கின்றோம்.

''இஸ்லாம் மூற்கர்களால் செய்யப்பட்ட பலாத்கார விபரம்.

| வருஷம். | இந்து பெண்கள் | முஸ்லீம் பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1926 | 113 | 481 | 594 |
| 1927 | 122 | 576 | 698 |
| 1928 | 104 | 460 | 564 |
| 1929 | 114 | 676 | 790 |
| 1930 | 104 | 531 | 635 |
| 1931 | 125 | 573 | 698 |

இந்து மூற்கர்களால் செய்யப்பட்ட பலாத்கார விபரம்.

| வருஷம். | இந்து பெண்கள் | முஸ்லீம் பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1926 | 194 | 9 | 203 |
| 1927 | 201 | 3 | 2[illegible]4 |
| 1928 | 198 | 10 | 208 |
| 1929 | 236 | 8 | 244 |
| 1930 | 234 | 6 | 240 |
| 1951 | 197 | 3 | 200'' |

மதம். ஒழுக்கத்தை, கூட்டு வாழ்க்கை ஒழுங்கு முறையை மனிதர்களிடத்தில் மனிதன் நடந்து கொள்ளவேண்டிய தன்மையை எங்கே எப்படி கற்பித்து இருக்கின்றது என்று மத பக்தர்களைக் கேட்கிறோம்.

## காங்கிரஸ்காரர்களின் தேர்தல் பிரசார யோக்கியதை.

தோழர் வரதராஜுலு நாயுடு M L A க்கு நிற்பதில்லை என்றும், தோழர் ஸர். ஆர்.கே. ஷண்முகம் வர்த்தகத் தொகுதிக்கு நிற்பதில்லை என்றும் தெரிய வருவதாகக் காங்கிரஸ்—தேசியப் பத்திரிகைகள் எழுதுகின்றன தோழர் வரதராஜுலு இதை மறுக்கிறார் எனவே இதைவிட கேவலமான முறை கொண்ட ஒரு பிரசாரம் வேறு யாரும் எப்படிப்பட்ட மோசமான வாழ்க்கைக்காரரும் செய்ய முடியாதென்றே சொல்லுவோம்.

சத்தியம், தர்மம், நீதி, ஒழுங்கு, நாணயம் ஆகியவைகளின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருக்கும் ஸ்தாபனங்கள் கொள்கைகள் ஆகியவைகளைச் சேர்ந்தவர்களாலேயே இவ்வித பிரசாரங்கள் நடக்குமானால் சதாரண வாழ்வில் இருப்பவர்களால் இனியும் என்ன என்ன காரியம் நடக்காது என்று கேழ்க்கின்றோம். தேர்

# இ ந் தி ய
# சட்டசபைத் தேர்தல்.

## டாக்டர் வரதராஜுலுவுக்கு ஆதரவு.

### மாஜி முதல் மந்திரி அறிக்கை.

"வரப்போகும் இந்தியா சட்டசபைத் தேர்தலில் சேலம். கோவை, வட ஆற்காடு ஜில்லா தொகுதிக்கு அபேட்சகராக நிற்க முன் வந்திருக்கும் டாக்டர் பி. வரதராஜுலுவை ஆதரித்து, பிரமுகர்களில் அனேகர் கையொப்பமிட்டு வெளியிட்டிருக்கும் அறிக்கைகளைக்கவனித்தோம். டாக்டர் நாயுடு சிறந்த தேச பக்தர். அவர் இதுவரை செய்து வந்திருக்கும் தேச சேவையும், பொதுஜன சேவையும், தேச விடுதலைக்காக அவர் மும்முறை சிறை புகுந்திருப்பதும் அனைவரும் அறிந்ததே. அவரைப்போன்ற அஞ்சா நெஞ்சம்படைத்த உத்தம தேச பக்தர்கள், இந்தியா சட்டசபையில் ஸ்தானம் வகிப்பதால் நாட்டிற்கு விசேஷ நன்மை யுண்டாகக்கூடும் என்பதில் ஐயமில்லை. டாக்டர் நயுடு காருவை நாங்கள் முழுமனதோடு ஆதரிப்பதுடன், கோவை, சேலம், வட ஆற்காடுஜில்லா வாக்காளர் அனைவரும் ஏகோபித்து, வரப்போகும் இந்தியா சட்டசபைத் தேர்தலில் அவரை ஆதரித்து தங்களுடைய வாக்குகளைக் கொடுத்தனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நாடு சுதந்திரமடையவும், நாட்டில் ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம் ஏற்படவும், தொழிலாளர் அபிவிருத்தியடைந்து க்ஷேமமாய் வாழவும் அவர் இதுவரை செய்து வந்திருக்கும் சேவையை ஒரு நாளும் மறக்க முடியாது. இனியும் அவர் இதுபோலவே சேவை செய்து வருவாரென்பது உறுதி, இந்த நிலைமையில், கோவை, சேலம், வட ஆற்காடு ஜில்லா வாசிகள், அவருக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்து, அவர், தேர்தலில் மகத்தான வெற்றியடையும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். அவருடைய தியாகத்துக்கும், தேசபக்திக்கும், ஊக்கத்திற்கும், உற்சாகத்திற்கும் நாம் அனைவரும் போதிய பக்கபலமாக இருக்கவேண்டும்,"

திவான்பகதூர் பி. முனுசாமி நாயுடு பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி.

வி. எம். ராமசாமி முதலியார், எம். எல். ஸி.

வைஸ் பிரஸிடெண்டு, ஜில்லாபோர்டு, வேலூர்,

---

தல் முறை என்ன என்பதைப் பற்றியும் தேர்தலில் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதிலும், எழுதிக் கொள்வதிலும் எவ்வளவு நாணயமும், உண்மையும் இருக்கக்கூடும் என்பதைப்பற்றியும் பொது மக்கள் தெரிந்து கொள்ள இந்த ஒரு உதாரணம் போதாதா என்று மாத்திரம் கேட்டுவிட்டு இதை முடிக்கிறோம்.

### ஈ. வெ. ராமசாமி.

தோழர் ஈ. வெ. ராமசாமி 8-ந்தேதி இரவு சென்னைக்குச் செல்கிறார் 10-ந்தேதி திரும்புவார். 16-ந்தேதி தோழர்கள் அழகப்பா—பவனும்பாள் திருமணத்துக்குத் தலைமை வகிப்பார்.

## ஏஜண்டுகள் தேவை.

சென்னையிலும், தஞ்சையிலும், நாகபட்டினத்திலும் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மனேஜர்
"பகுத்தறிவு"
ஈரோடு.

---

(9ம் பக்கத் தொடர்ச்சி).

டித் தொண்டு என்று சொல்ல வேண்டியதாகின்றது என்றால் இதற்குநாம் விசனப்பட வேண்டியதுதான்.

உலகம் எவ்வளவு தான் தந்திரங்களுக்குஅடிமைப்பட்டு விட்டதென்றாலும், இன்றைய நிலையில்நாணயத்திற்கும், ஒழுக்கத்திற்கும் அதாவது நாணயம், ஒழுக்கம் என்கின்ற வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்கின்றது என்றே கருதுகின்றோம். ஆதலால் நாணயம் இல்லாதவனும், ஒழுக்கம் இல்லாதவனும் காங்கிரசில் சேர்ந்தால் ஒழுக்கமும், நாணயமும், ஏற்பட்டு விடும் என்கின்ற வார்த்தையின் பயனாய் (அறிவுள்ள சமூகத்தில்)பிரதிகூலம்தான்ஏற்படுமே தவிரஅனுகூலம்ஏற்படாதென்றே சொல்லுகின்றோம் அன்றியும் மனிதனின் முன் பின் நிலை, தியாகம், ஒழுக்கம் நாணயம் முதலியவை ஒன்றும் கவனிக்கப்படாமல்வெறும் தேசாபிமானத்தையும்,தேசாபிமானத்துக்கும் தாங்கள் சொல்லுவதையே அர்த்தமாக வைத்துக்கொண்டு" காங்கிரஸ் காந்திஆதலால் ஒட்டுச்செய்யுங்கள்" என்று சொல்லுவதென்றால்அதன் தைரியத்தைப்பார்க்கும்போது தங்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் முழு மூடர்கள் கபோதிகள், களிமன் உருண்டைத் தலைகள் என்று கருதி இருப்பதாகத்தான்நினைக்கவேண்டி இருக்கிறது.

இன்றையத் தினம் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களை நாம் ஒரு கேள்வி கேள்கின்றோம்.

அதாவது தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுக்கும்ராமசாமி முதலியாருக்கும் எந்த விஷயத்தில் என்ன? வித்தியாசம்.

தோழர் அவனாசி லிங்கம் செட்டியார் என்பவருக்கும் டாக்டர் வரதராஜுலுவுக்கும் எந்த விதத்தில் என்ன? வித்தியாசம்.

தோழர் குமாரசாமி ராஜா என்பவருக்கும் விருதுநகர் வி. வி. ராமசாமி அவர்களுக்கும் எந்தவிஷயத்தில் என்ன வித்தியாசம்.

தோழர் சாமிவெங்கிடாசலம் செட்டியார் அவர்களுக்கும் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்கும் எந்த விதத்தில் என்ன வித்தியாசம்?

தோழர் முத்துரங்க முதலியார் அவர்களுக்கும், தோழர் நடராஜ முதலியார் அவர்களும் எந்த விதத்தில் என்ன வித்தியாசம் சொல்லக்கூடும் என்று கேழ்க்கின்றோம்.

5 ஸ்தானங்களுக்கு காங்கிரசின்பேரால் 5 பேரை நிறுத்தி போட்டி போட்டுக்கொண்டு காங்கிரசின் பேரால் என்று போடப்பட்ட ஆட்களைப் பற்றியோ, அவர்களின் யோக்கியதைகளைப்பற்றியோ ஒரு வார்த்தைகளைகூட எடுத்துப்பேச யோக்கியதை இல்லாத நிலையில் இருந்துகொண்டு "காங்கிரசு, காந்தி, காங்கிரசில் சேராதவன் தேசத்துரோகி ஆதலால் ஓட்டுச் செய்யுங்கள்" என்றும், "காங்கிரசுக்கும், காந்திக்கும் போர்நடக்கின்றது ஆதலால் ஓட்டுச்செய்யுங்கள்" என்றும் சொல்லுகின்றதினாலேயே இவர்களைப் எப்படி ஜெயித்து விடுவார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்ட கனவான்கள் என்பவர்கள் ஜாதி மதங்களைக்காப்பாற்றும் வருணாச்சிரம வாதிகளா? அல்லவா? என்று கேட்கின்றோம்.

ஒருவர் இருவர் ஒரு சமயம் அரை வருணாச்சிரமவாதிகளாய் இருக்கலாம். அல்லது வெளியில் சொல்லப்படுபவர்களாய் இருக்கலாம். வேறு விதத்தில் மற்றவர்களை விடக் காங்கிரஸ்காரர்கள் எப்படி உயர்ந்தவர்கள் என்று கேட்கின்றோம்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பார்ப்பன ஆதிக்கம் என்பதைத்தோழர் ராஜகோபாலச்சாரியார் அவர்களும், சில பார்ப்பனரல்லாத காங்கிரஸ்வாதிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். (ஆனால் ஏன் பார்ப்பனரல்லாதாரில் தகுந்த ஆட்கள் வரக்கூடாது என்று கேட்கின்றார்கள். அது வேறு விஷயம்)

இந்தப்பார்ப்பனர்களின் கருத்து தமிழ் நாட்டில் எந்தப் பார்ப்பனரல்லாதாரும் தலை எடுக்கக்கூடாது என்பதைத் தவிர வேறு இல்லை என்பது காந்தியார், ஜவகர்லால் வரையில் எட்டிய உண்மையாகும்.

இந்தத் தேர்தலில் இவர்களுடையநோக்கம் எல்லாம்பார்ப்பனரல்லாத சுயபுத்தி உள்ளவர்

கள் இந்தியசட்டசபைக்குப்போகக்கூடாது என்பதைத் தவிர சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் தோழர்கள் ஆர். கே. ஷண்முகம், பி. வரதராஜுலு, ஏ. ராமசாமி முதலியார் போன்றவர்கள் கண்டிப்பாகப் போக்ககூடாது என்பதைத் தவிர வேறு இல்லை என்று உறுதியாகச் சொல்லுவோம்.

இம்மூவரும் சென்றால்தமிழ் நாட்டில் பார்ப்பனர்களைவிட ஒவ்வொருவிதத்தில் திறமைசாலிகள் பார்ப்பனரல்லாதாரிலும் இருக்கிறார்கள் என்பது உலகத்துக்கு விளங்கிவிடும். இதனால் தாங்கள் (பார்ப்பனர்கள்) இதுகால வரையில் பார்ப்பனரல்லாதாரைத் தமிழ் நாட்டை விட்டு வெளிமாகாணங்களுக்குத் தெரியாதபடி பத்திரிகை மூலமும் விஷமப்பிரசாரம் மூலமும் அடக்கி வைத்திருந்ததின் பயன்விணாகப்போவதுடன் தங்கள் யோக்கியதைகளும்வெளியாகி விடுமே என்கின்றநடுக்கமே அல்லாமல்வேறு ஒரு காரணமும் அல்ல.

எனவே இந்தக் கருத்தை முக்கியமாய் வைத்துக்கொண்டுதான் ஞானமற்ற—சுயநலக்கார—வேலையில்லாக் கஷ்டத்தால் துன்பப்படுகிற—பொறாமைப் பேய்க்கு அடிமைப்பட்ட—பூதக்கண்ணாடியைவைத்து கண்டுபிடிக்கத்தக்க யோக்கியதையுள்ள பார்ப்பனரல்லாதார்களை சுவாதீனம் செய்து கொண்டு "காந்தி, காங்கிரஸ், தேசாபிமானம், என்று சொல்லிக் கொண்டு இப்படிப்பட்ட சூக்ஷியையும், பித்தலாட்டங்களையும் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை பார்ப்பனரல்லாத சுயமரியாதையுள்ள மக்கள் உணரவேண்டும் என்று ஆசைபடுகின்றோம்.

## இந்திய சட்ட சபைத்தேர்தல்.

### ஸர். ஷண்முகத்திற்கும், தோழர் வி. வி. ராமசாமிக்கும் பேராதரவு.

ஜஸ்டிஸ் கக்ஷியின் எலக்ஷன் போர்டு அங்கத்தினர் தோழர் ஊ. பு. அ. சௌந்தர பாண்டியன் எம். எல். சி. அவர்களும் சர் ஷண்முகத்தின் சகோதரர் தோழர் ஆர். கே. வெங்கடாசலம் அவர்களும் கோயம்புத்தூர் வியாபாரிகள் சங்கத்தலைவர் தோழர் பழனிச்சாமி நாயுடு அவர்களும், வரப்போகும் இந்திய சட்ட சபைத்தேர்தலை முன்னிட்டு மதுரை ராமனாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களில் சென்றவாரம் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருமங்கலம், சாத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி முதலிய ஊர்களுக்கு விஜயம் செய்து ஆங்காங்குள்ள பிரமுகர்களையும், ஓட்டர்களையும் கண்டு பேசினர். போன இடங்களில் எல்லாம் வியாபாரிகள் தொகுதியில் சர். ஷண்முகத்திற்கும், மதுரை ராமனாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களின் பொதுத்தொகுதியில் விருதுநகர் சேர்மன் தோழர் வி. வி. ராமசாமி அவர்களுக்கும் பேராதரவு இருப்பதாய்த் தெரிகிறது. சர் ஷண்முகத்துக்குப் போட்டியாக நிற்கும் சாமி வெங்கடாசலம் செட்டியாருக்கு ஒரு ஓட்டுக்கூடக் கிடைப்பது சிரமம், வியாபாரிகள் தொகுதியில் மொத்தம் உள்ள ஓட்டுகளில் மூன்றில் ஒரு பகுதி இந்த மூன்று ஜில்லாக்களில் தான் இருக்கின்றன. அவர்களில் பெரும்பாலோர் நாட்டுக்கோட்டைச் செட்டியாரும் நாடார்களுமாவார்கள். இவர்கள் எல்லோரும் சர். ஷண்முகத்திற்கே ஓட்டுச் செய்வதாக உறுதி செய்திருக்கின்றனர்.

மதுரை ராமனாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களின் பொதுத்தொகுதியில் விருது நகர் முனிஸிபல் சேர்மன் தோழர் வி. வி. ராமசாமி அவர்கள் ஜஸ்டிஸ் கக்ஷியின் சார்பாகத்தான் அபேக்ஷகராக நிற்பதாய் அறிவித்தவுடன் காங்கிரஸ்காரர்களின் பிரசாரம் அனேகமாய் நின்றுவிட்டது என்றே தெரிகிறது. தோழர் ராமசாமி அவர்களுக்கு மூன்று ஜில்லாக்களிலும் உள்ள செல்வாக்குள்ள பிரமுகர்கள் எல்லோரும் பூரண ஆதரவு அளிப்பதாய் நேரிலும், தபால் மூலமும் வாக்குறுதி செய்திருக்கின்றார்கள். தோழர் ராமசாமி அவர்கள் செப்டம்பர் இரண்டாவது வாரத்திலிருந்து தமது தொகுதி முழுமையும் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

சர் ஷண்முகம் அவர்களும் சீக்கிரம் தென்ஜில்லாக்களுக்கு விஜயம் செய்வார். அவர் வந்து போனபின் கனம் பொப்பிலி ராஜா அவர்களும் இந்த இரண்டு அபேக்ஷகர்களையும் ஆதரித்து தென் ஜில்லாக்கள் முழுமையும் எலக்ஷன் பிரசாரம் செய்வார் என்று தெரிகிறது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மரணம்.

கோட்டையூர் சுயமரியாதைத் தோழர் அ. க. அ. சிதம்பரம் அவர்கள் தாயார் 6-9-34ந்தேதி மரணமடைந்து விட்டார். ஒரு நிருபர்

## "கலப்பு மணம் அல்லது பிராமணனும்— சூத்திரனும்"

கோலார் தங்கவயல் சமதர்ம நடிகர் சங்கத்தாரால் "கலப்பு மணம், அல்லது பிராமணனும், சூத்திரனும்" எனும் நாடகம் இரண்டாம் முறையாக, இராபர்ட்சன் பேட்டை லக்ஷ்மிபதி நாடகவரங்கில் 1-9-34 சனிக்கிழமை இரவு நடைபெற்றது. இந்நாடகம் கடந்த 10-3-34ந்தேதி அன்று இதே ஊரில் நடைபெற்று, வந்திருந்த மக்களிடையே ஒரு பேரூக்கத்தையுண்டுபண்ணிற்றெனலாம். இக்கோலார் சமதர்ம நடிகர் சங்கத்தார் இந்நாடகத்தை கடந்த ஆகஸ்ட் 25-7-34ல் சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் தலைமையின் கீழ் வடார்க்காடு ஜில்லா வாணியம்பாடியில் நடத்தினர். அது போழ்து வடார்க்காடு ஜில்லாவிலுள்ள அனேக இடங்களிலிருந்து நாடகத்திற்கு அனேக தோழர்கள் விஜயஞ்செய்து குதூகலித்தனர். அதன் பின் கோலார் தங்க வயலில் அனேக சீர்திருத்த தோழர்களின் வேண்டுகோளின்படி இரண்டாம் முறையாக கடந்த வாரம் நடத்தியபோது சீர்திருத்த வாதிகள் முதல், வைதீகர் வரை இந்நாடகத்தை போற்றாமலில்லை. நாட வாலிபர்கள் முன்னிரு தடவைகளில் நடித்ததைவிட இம்முறை அதிக விமரிசையாக நடித்துக்காண்பித்தனர். இடையிடையே சமதர்ம சீர்திருத்த கீதங்கள் பாடினார்கள். 'ஆயிரக்கணக்கான தோழர்கள் இந்நாடகத்தைக் கண்காணித்து சென்றது குறிப்பிடத்தகுந்தது. இறுதியாக நடிகர் சங்க காரியதரிசி தோழர் எம். ஜெயராம் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 2 மணிக்கு பேராரவாரத்துடன் நாடகம் முடிவுற்றது. விரைவில் இந்நாடகம் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் வேண்டுகோளின்படி ஈரோட்டிலும்' தோழர் வி. முருகேஸரின் வேண்டுகோளின்படி வேலூரிலும் நடைபெறும். (நமது நிருபர்)

## திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம முதலாவது மகாநாடு.

அறிக்கை நிர். 1.

திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம சமூக சீர்திருத்த சங்கத்தின் 5-வது நிர்வாகக் கூட்டம் 1934-ம் வருஷம் செப்டம்பர்மீ 3-உ திங்கட்கிழமை திருநெல்வேலி டவுன், தொண்டர்நயினார் மேலமாடவீதி, தோழர் எ. குமாரசுவாமி ஆச்சாரியாரவர்கள் இல்லத்தில் ஷியார் தலைமையின் கீழ் நடைபெற்றது

நாளது வருஷம் அக்டோபர் மாதம் சடைசி வாரத்தில் திருநெல்வேலி ஜில்லா, விஸ்வகர்ம முதலாவது மகாநாடு திருநெல்வேலி டவுனில் நடத்தவும், தோழர் கே எஸ். குருசாமி அவர்கள் வரவேற்புத் தலைவராகவும், தோழர் கே. என். தங்கவேலு அவர்கள் மகாநாட்டுக் காரியதரிசியாகவும், தோழர்கள் பி. வி. சங்கர்சுப்பு ஆச்சாரி, டி. எல். சங்கரன் ஆச்சாரி ஆகிய இவர்கள் உபகாரியதரிசியாகவும், மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க ஈரோடு தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்களைக்கேட்டுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.


# கோவா லாட்டரி,

சொற்ப செலவில் மாதம் 2 தடவை உங்கள் அதிர்ஷ்டத்தைப்பரிசோதித்துப் பயனடையத்தக்க, நாணயமும், நம்பகமுமான இடம் இது ஒன்றே,

நடப்பு டிராவிங் தேதி "சாந்தகேஸா" 17—9—1934.

முதல் பிரைஸ் ரூ. 55000—0—0. — மொத்தம் பிரைஸ்கள் 4000.

தனி கூப்பன் டிக்கட் விலை ரூ. 1—2—0.
5 கூப்பன் கொண்ட முழு டிக்கட் விலை ரூ. 5—10—0.

கம்பெனி விதிப்படி எல்லா டிக்கட்டுகளும் முன்பணம் கட்டியே எடுக்கப்படுவதால் நாமும் முன்பணம், அல்லது V. P. ஆர்டர்களுக்கு மட்டும் டிக்கட் சப்ளை செய்யப்படும்.
எல்லாவிடங்களிலும் மொத்த விற்பனையாளர் தேவை. கமிஷன் உண்டு.

டிக்கட் கிடைக்குமிடம்:— T. G. கன்னியப்பன்,
ஜெனரல் கமிஷன் ஏஜண்டு, துடுப்பதி P. O., (Via) பெருந்துறை. S. I.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மான சீர்திருத்தங்களைக் கொடுக்கக் கூடுமென்பதே.

கே:—காங்கிரஸ் நிர்மாணத்திட்டத்தை நீங்கள் சட்டசபை மூலமாய் வற்புறுத்துவீர்களா, மாட்டீர்களா?

ப:—சந்தேகமில்லாமல் வற்புறுத்துவோம்.

கே:— தீண்டாமை விலக்கு, நிர்மாண திட்டத்தில் அடங்கினதல்லவா?

ப:—ஆம்.

கே:—ஆலயப்பிரவேம் தீண்டாமை விலக்கில் அடங்கியிருக்கிறதா, இல்லையா?

ப:—ஆம்.

கே:—ஆலயப்பிரவேசம் மதசம்பந்தமானதன்றா?

ப:—இல்லை.

ஸ்ரீ அய்யர்:—நான் வேறுவிதமாக நினைக்கிறேன்.

டாக்டர் ராஜன்:—நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் ஓர் மனிதன், தன்னுடைய இனத்தாருக்கு செய்ய வேண்டிய கடமையாகவே இதை நினைக்கிறேன் (கரகோஷம்)

கே:—காங்கிரஸ், மத விஷயங்களில் நடு நிலைமை வகித்து வந்திருக்கின்றதென்று சொன்னீர்கள். ஆனால் ஹிந்து தீண்டாமை விலக்கு போன்ற சீர்திருத்தத்தை சில வருஷங்களாய் வற்புறுத்தி வருவதால் நடு நிலைமையிலிருந்து புரண்டு விடவில்லையா?

ப:—காங்கிரஸ் பெயரால் ஒரு சமூக சீர்திருத்தமும் நடைபெறவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் இவ்விஷயத்தில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் இது காங்கிரஸின் அபிப்பிராயமாகாது.

கே:—சென்ற வாரத்தில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கும் பொழுது காந்திஜீ 'காங்கிரஸ் தீண்டாமை விலக்கு விஷயமாய் உறுதியான பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கிறது' என்று சொன்னாரே? அதற்கு தாங்கள் என்ன சொல்கிறீர்கள்.

ப:—இது மகாத்மாவின் கருத்தாயிருக்கலாம். ஆனால் காந்திஜீ காங்கிரஸ் அல்ல. மகாத்மா தான் காங்கிரஸ் என்று நான் நினைக்கவில்லை.

கே:—தென் இந்தியா சுற்றுப்பிரயாணத்திற்குப் பிறகு காந்திஜி ஆலயப் பிரவேச விஷயத்திற்கு அதிக எதிர்ப்பு இருப்பதாய் கண்டு கொண்டார் என்று சொன்னீர்களே? எந்த இடத்தில் அப்படிச் சொல்லியிருக்கிறார்?

ப:—அவர் வியக்தமாய் அப்படி எங்கும் சொல்லவில்லை. ஆனால் கும்பகோணம் நகர சபை பத்திரத்திற்குப் பதிலளிக்கையில் ஒருவர் விரோதமாக இருந்தால் கூட கோயிலை திறந்து விட தான் சொல்லப் போவதில்லை யென்று திட்டமாய்க் கூறியிருக்கிறார். அப்படியே ஆந்திர தேசத்தில் ஒரு டிரஸ்டி விரோதமாயிருந்த காரணத்திற்காக, ஹரிஜனங்கள் உள்ளே போகவேண்டாமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

தோழர் ஜி. வி. வெ. அய்யர்.—பொதுஜன அபிப்பிராயம் விரோதமாயிருக்கிறதென்று தாங்கள் அறிந்த பின்னர் ஏன் அந்த மசோதாவை வாபீஸ் வாங்கிக்கொள்ளவில்லை?

பதில்:—நாங்கள் அதைத் வற்புறுத்தவும் இல்லை. இதிலிருந்து நீங்கள் ஊகித்துக்கொள்ளலாம். (சிரிப்பு)

தோழர் எஸ். எம். அய்யர்:—காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் பொருளாதார சம்பந்தமாய் கராச்சி தீர்மானத்தை அனுஷ்டிப்பதாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் அதே கராச்சியில் ஒப்புக்கொள்ளப்பட்ட, மத விஷயத்தில் நடு நிலைமை வகிப்பது என்ற திட்டத்தை மாத்திரம் ஏன் கூறவில்லை'

ப:—என்னைக் கேட்டுக் கொண்டு அறிக்கை தயார் செய்யப்படவில்லை ஆனல் என்னுடைய தேர்தல் அறிக்கையில் நான் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகையால் மத விஷயமாய் நடுநிலைமை வகிப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

கே:—காங்கிரஸ், மற்றவர்களைப் போல் இல்லாமல், ஓர் திட்டமான வரம்புக்குட்பட்டு ஒரு கக்ஷியாய் நிற்பதாய் கூறினீர்களே! அப்படியிருக்க தேர்தல் அறிக்கையிருந்து மாறுபட்டு நிற்க, தனிப்பட்ட காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கு உரிமையுண்டா?

ப:—சில விஷயங்களில் மாறுபட சுதந்திரம் இருப்பதாகவே நான் கருதுகிறேன். அடிப்படையான விஷயம் வேறு.

டி. கிருஷ்ணசாமி அய்யங்கார் (வக்கீல் சங்கத்தலைவர்) ஹரிஜனை என் வீட்டில் விடாவிட்டால் அவனை அது அவமானப்படுத்துவதாகுமென்று காங்கிரஸ் மசோதா கொண்டு வருமா?

ப:—ஒருவர் வீட்டில் நுழைவதென்பது சொத்தைப் பற்றிய சுதந்திரமாகும். காங்கிரஸ் ஒருநாளும் சொத்து சுதந்திரத்தில் குறுக்கிடாதென்று உறுதி கூறுவேன்.

ம. அய்யர்:— சேத் ஜம்னாலால் பஜாஜ் சொத்து பங்கிட்டு கொடுக்கப்பட வேண்டுமென்று கூறியிருப்பதை நீங்கள் அறிவீர்களா?

ப.—ஆம். ஆனல் அது பஜாஜின் சொந்த அபிப்பிராயமேயாகும். காந்திஜி ஜமீன்தார்களுக்கு கூறியதை நீங்கள் கவனித்தால், சொத்து விஷயமான நிலமை என்னவென்பது நன்குத் தெரியும்,

துரைசாமி பிள்ளை:— மத விஷயத்தில் தலையிடப் போவதில்லை என்று சொன்னீர்களே, சாமியின் பெயரால் கள் குடிக்கப்படுகிறது, ஆடு, கோழி வெட்டப்படுகிறது. யாகம் செய்யப்படுகிறது, இதையெல்லாம் தடுக்க சட்டம் வந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்.

ப:—நான் சட்டமூலமாய் நிர்ப்பந்தப்படுத்த ஒருநாளும் சம்மதிக்க முடியாது. பிரசாரத்தினுல் தான் காரியம் சித்தியடைய வேண்டும். யாகம் செய்தால் என்ன, வயிற்றுக்காக அடித்துத் தின்றால் என்ன? கொலை, கொலைதான். இதில் ஒன்றும் வித்தியாசமில்லை. சட்டம் இதற்கு பிரயோஜனப்படாது.

பிறகு ஆர்ய வைசிய வகுப்பைச் சேர்ந்த செட்டியார் ஒருவர் கேட்டதாவது— "தீண்டாமை விலக்கு, ஆலயப் பிரவேசம் போன்ற மசோதாக்கள் வந்தால் தாங்கள் என்ன செய்வீர்கள்?"

ப:—பொது ஜனங்களின் பெரும் பான்மையான ஆதரவு இந்த மசோதாக்களுக்கு இல்லையென்றால், அவைகளை நான் எதிர்க்கத்தான் வேண்டியிருக்கும்.

கே—பொதுஜன அபிப்பிராயத்தை எப்படித் தெரிந்துகொள்கிறது?

ப:—அதற்கு வேண்டிய வழிகள் பிறகு நிர்ணயிக்கப்படும்.

பிறகு வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

## திருச்சி மருத்துவர் சங்கம்.

திருச்சி மருத்துவர் சங்க-8-வது ஆண்டு வருட பூர்த்திக்கூட்டம் 3-9-34-ந் தேதி மாலை வரகனேரி மேட்டுத்தெரு. க. பிச்சைமுத்து அவர்கள் சித்த வைத்தியசாலையில் சங்கத்தலைவர் தோழர் ம. இராஜகோபால் தலைமையின் கீழ் கூடிற்று கூட்டத்திற்கு தலைவர் தலைமை வகித்ததும் சங்கக் காரிபதரிசி அவர்களால் 8-வது ஆண்டுவிழா அறிக்கை வாசிக்கப்பெற்றது பிறகு 9-வது ஆண்டிற்கு காரிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது- தலைவர் முடிவுரைப்பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று சிற்றுண்டி, தேத்தண்ணீர் அருந்தி இரவு 8-மணிக்கு இனிது முடிவுற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.


## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

—0—

நாகர் கோவிலிலிருந்து

தோழர் பி. சுப்பிரமணியம்

பி. ஏ. பி. எல். அவர்களை

ஆசிரியராகக்கொண்டு

## "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோரும் வெளிவருகிறது.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூ. | 3—0—0 |
| 6 மாதம் | ,, | 2—0—0 |
| 3 மாதம் | ,, | 1—4—0 |

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

## "தன்மிழ"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழன், வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள்.— சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0
வெளிநாடு ரூ. 5—0—0

விலாசம்:—

மானேஜர், "தமிழன்".
அண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார்தங்கவயல்.

## ரூ. 2—4—0க்கு 3 கெடியாரங்களும், 14 காரட் ரோல்டு கோல்டு நிப் உடன் ஒரு பவுண்டன் பேனாவும் 132 வெகுமதிகளும்.




எங்கும் புகழும் பிரக்யாதியும் பெற்ற ரோஜா புஷ்ப வாசனை செண்ட் (அத்தர்) பாட்டல் 6க்கு விலை ரூ. 2-4-0. ஒரே தடவையில் 6 பாட்டல் வாங்குகின்றவர்களுக்கு ஒரு ரயில்வே ரெகுலேட்டர் ஊமை (போலி) பாக்கட் கெடியாரமும், 5 வருஷ உத்திரவாதமுள்ளதும் கெட்டியான வேலைப்பாடமைந்ததுமான B-டைம்பீசும், ஒரு தங்க முலாம் பூசிய ஊமை (போலி) ரிஸ்ட் வாட்சும், ஒரு தங்க நிப்பு உள்ள பவுண்டன் பேனாவும், ஒரு அழகான முத்து மாலையும் 128 பலவித சாமான்களும் இனாமாக அனுப்பப்படும்.

பாக்கிங் & தபால் கட்டணத்திற்கு அணா 0—14—0.

The American Commercial Store,
Post Box No. 12213 Calcutta (K)

(3ம் பக்கத் தொடர்ச்சி).

கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தின் பயனாக ஜில்லாவிலுள்ள முக்கியஸ்தர்கள் பலரும் டாக்டர் நாயுடுவையே ஆதரிப்பதாக முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இதற்கு முன்பே ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் 20 பேருக்கு மேல் கையெழுத்திட்டு டாக்டர் நாயுடுவுக்கு ஓட்டுச் செய்யும்படி வாக்காளர்களுக்கு அறிக்கை வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்,

### யூனியன் போர்டு வரவேற்பு.

மாலையில் ஆம்பூர் யூனியன் போர்டார் யூனியன் போர்டு காரியாலயத்தில் தலைவருக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். திவான்பகதூர் பி. முனுசாமி நாயுடு, தோழர் வி. எம். ராமசாமி முதலியார், டாக்டர் நாயுடு ஆகிய மூவரையும் வாத்தியகோஷங்கள் முழங்கமுக்கியமான தெருக்களின் வழியாக ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். ஊர்வலம் யூனியன் போர்டையடைந்ததும் யூனியன்போர்டு தலைவர், தலைவர்களை குதூகலமாக வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். பல பெண்களுள்பட இவ்வைபவத்திற்கு ஏராளமாக வந்திருந்தார்கள். தோழர்கள் மௌல்வி சாகிப், மளிகை அஜீஸ் சாகிப், பஷீருடின் சாகிப், ஜாபர் சாகிப், டி. சாமுவேல் கார்கூர் ராமசாமி நாயுடு, இளையபெருமாள் முதலியார், ராமலிங்க ரெட்டியார் கார்கூர் சங்கரையா நாயுடு, பூங்காவனம் நாட்டார், ஜி. எம். சுவாமிநாத முதலியார், சுப்பிரமணிய ஐயர், கே. எம். குப்புசாமி முதலியார், டாக்டர் நாதமுனி நாயுடுகாரு, எஸ். சுப்பிரமணிய ஐயர், கே. எம். குப்புசாமி முதலியார், ஜி. அப்துல் சுக்கூர், வி. எஸ். விஸ்வநாதம், சபரத்தின முதலியார், எப். சாப்ஜி சாகிப், வட்டலம் அப்துல் ரஹிமான், கே. குப்புசாமி முதலியார், ஷண்முகானந்தர், மூர்த்தி, தங்கவேலு கவுண்டர், ராஜா சிதம்பரம் முதலியார், செங்கம நாயுடு, ஏ. ராமச்சந்திர நாயுடு, வேணுகோபால செட்டியார், போடி நாயுடு, கோவிந்த ஆசாரி, கேசவ ஆசாரி, முனிரத்தினம் நாயுடு, அப்துல் ரஹிமான் முதலியவர்கள் இவ்வைபவத்திற்கு வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்களாவர்கள்.

### சேவைக்கு வாழ்த்து.

தலைவர்களுக்கு மாலை சூட்டியதும் யூனியன் போர்டு சார்பாக உபசாரப்பத்திரங்களை வாசித்துக் கொடுத்தார்கள்.

தோழர்கள் முனிசாமி நாயுடுவும், வி. எம். ராமசாமி முதலியாரும் வரவேற்புக்குப் பதில் அளித்தவுடன் டாக்டர் நாயுடு பலத்த கரகோஷத்தினிடையே எழுந்து பேசியதாவது:—

"நான் இந்திய சட்டசபைத் தேர்தல் சம்பந்தமாக உங்கள் ஊருக்கு வந்திருக்கும் இச்சமயத்தில், எனக்கு உபசாரப்பத்திரம் அளித்து செய்த கௌரவத்திற்காக இந்த யூனியன் போர்டு தலைவருக்கும், அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் மீது இந்த ஜில்லா வாசிகளும், முக்கியமாக ஆம்பூர் யூனியனும் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு இது அறிகுறி என்றே கருதுகிறேன்.

### கிராம நிலைமை

"கிராமங்கள் அபிவிருத்தியடையவேண்டியது மிகமிக முக்கியமானது.

பொருளாதார விஷயத்திலும், சுகாதாரத்திலும் இப்பொழுது கிராமவாசிகள் அதிக மோசமான நிலைமையிலிருக்கின்றனர். இன்று பட்டணங்களிலுள்ளவர்களுக்கு எத்தகைய சௌகரியங்களிருக்கின்றனவோ, அதே சௌகரியங்கள் கிராமவாசிகளுக்குமிருக்கவேண்டும். நல்ல குடி தண்ணீர், சுகாதார வசதி, மின்சார வசதி முதலியவை முக்கியம். கிராமஸ்தாக்கள் அபிவிருத்தியடைய வேண்டும். வாலிபர்களைச் சிறந்தவர்களாக்கும் நல்ல சினிமாக்களும், மற்ற காட்சிகளும் ஏற்பட வேண்டும்.

### பொருளாதார நிலை.

"இன்று இந்திய மக்களின் பொருளாதார நிலை மிக மோசமானதாயிருக்கிறது. இக்கஷ்டத்தைப்போக்கும் முறைகளை உடனே அனுஷ்டிக்கவேண்டும். விலைவாசிகள் உயர்ந்து பொருளாதார மந்தம் போகும் வரையில், கடன் கொடுத்தவர்கள் கடன்பட்டவர்கள்மீது நடவடிக்கைஎடுப்பதைநிறுத்திவைக்க சர்க்காரும், சட்டசபையும் ஏற்பாடு செய்யவேண்டும். நிலத் தீர்வையையே நீக்கிவிடுவதும் சிறந்ததேயாகும். மேலும் தற்காலப் பாழும் படிப்பு முறையையும் மாற்றியமைக்க வேண்டும்.

வந்தனோபசாரத்துடன் இவ்வைபவம் முடிந்தது. இரவு ஆம்பூர் மைதானத்தில் பிரமாண்டமான பொதுக்கூட்டமொன்று கூடிற்று. தோழர் ஓ. ஏ. ராமலிங்க முதலியார் தலைமை வகித்தார். திவான்பகதூர் பி. முனிசாமி நாயுடு, டாக்டர் நாயுடு, தோழர் வி. எம். ராமசாமி முதலியார் ஆகிய மூவரும் "தற்கால நிலைமை" என்பது பற்றிப்பேசினார்கள்.

### திருப்பத்தூர்.

3-9-34ந் தேதி மாலை திருப்பத்தூரில் காந்தி மைதானத்தில் பிரமாண்டமான பொதுக்கூட்டமொன்று கூடிற்று. வடாற்காடு ஜில்லா போர்டு உபதலைவராகிய தோழர் வி. எம். ராமசாமி முதலியார் எம். ஏ. பி. எல்., எம். எல். சி. தலைமை வகித்தார். டாக்டர் பி. வரதராஜுலுவும், திவான்பகதூர் பி. முனிசாமி நாயுடுவும் "தற்கால நிலைமை"யைப் பற்றிப் பேசப்போவதாயிருந்தால் திருப்பத்தூர் வாசிகளேயன்றி அக்கம் பக்கம் கிராமங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் வந்து கூடியிருந்தார்கள்.

வாத்திய கோஷங்கள் முழங்க மூன்று தலைவர்களையும் முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். திருப்பத்தூர் வாசிகள் மூன்று தலைவர்களுக்கும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தனர். நகர வாசிகளின் சார்பாக ஜில்லா போர்டு அங்கத்தினர் தோழர் கரியக் கவுண்டர் தோழர் வி. எம். ராமசாமி முதலியாருக்கு உபசாரப்பத்திரத்தை வாசித்துக் கொடுத்தார். தோழர் பெரியசாமி பிள்ளை பி. ஏ. பி. எல்., திவான்பகதூர் பி. முனிசாமி நாயுடுவுக்கு உபசாரப்பத்திரத்தை வாசித்துக் கொடுத்தார். ஜில்லா போர்டு மெம்பரான டாக்டர் சீனிவாச முதலியார், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவுக்கு உபசாரப்பத்திரத்தை வாசித்துக்கொடுத்தார்.

பிறகு தலைவர்கள் "தற்கால நிலைமை" என்பதைப்பற்றியும், காங்கிரசில் டாக்டர் நாயுடு சேராமல் தனித்து நிற்பதின் காரணத்தைப்பற்றியும் பேசினார்கள்.

**பெண்ணுரிமைக் கீதங்கள்.**

தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கடலூர்சிறையில் இயற்றியது.
விலை அணா 0—1—0.
கிடைக்குமிடங்கள்:—
**குடி அரசு பதிப்பகம்,**
ஈரோடு.
**R. கிஸன்,**
கோவை.

**சமதர்மக் கீதங்கள்.**

தோழர் ப. ஜீவானந்தம் இயற்றியது.
விலை பை. 6.
கிடைக்குமிடங்கள்:—
**குடிஅரசு பதிப்பகம்**
ஈரோடு.
**சமதர்மக் காரியாலயம்**
ஜோலார்பேட்டை

முந்துங்கள்! முந்துங்கள்!!

**இங்கிலீஷ் பாஷை பேச, வாசிக்க, எழுதத்தெரியுமா?**

கடந்த 13 வருஷகாலமாய் தபால் மூலம் கற்றுக் கொடுக்கப்பட்டுவரும் நமது ஸ்பேஷல் மேட்ரிக்குலேஷன் கோர்ஸ்களை மாதா மாதம் சொற்ப தொகை அனுப்பி படிக்கலாம். விரும்பினால் சர்க்கார் பரீக்ஷைகளுக்கும் போகலாம். புது லிஸ்ட் ஆரம்பித்து விட்டது. விபரத்திற்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

அன்பையன்ஸ் காலேஜ்,
ஆறுமுகனேரி S. I. R.

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி

**யானைக்கால் குஷ்டம்**

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பெருக்கையும், பூகம்பத்தையும் உண்டு பண்ணி தண்டித்து எச்சரித்தார் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் (இதற்காக) தீமை யென்பது என்னவென்றும் கூட அறியாத குற்றமற்ற பச்சிளங்குழந்தைகளிடமும், கடவுள் பக்தியுடன் இருந்து கொண்டு கோவிலுக்குள் போக வேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டு இருக்கும் மக்களிடமுமா எல்லாம் வல்ல கருணைக் கடவுளின் கோபா வேஷத்தைக் காட்டுவது—பூகம்பத்தையும், வெள்ளப்பெருக்கையும், பஞ்சத்தையும் உண்டு பண்ணி ஒன்றுமறியாத மழலைச் சொல்பிதற்றும் பாலகர்களைக் கோரக்காட்சிக்குட்படுத்துவது? அந்தோ! அருளும்-அன்பும்-தயையும்-கருணையும்-ஞானமும் முள்ள ஒரு கடவுளின் செய்கையா இது? அல்லது தயைதாட்சன்யம், நீதி, அறிவு என்பவைகளை என்ன வென்று மறியா "அரக்கர்கள்", "சைத்தான்கள்" ஆகியவர்களின் செய்கையா இது? என்னே "இக் கருணைவள்ளலு"க்கு குழந்தைகளிடமாவது தாழ்த்தப்பட்ட மக்களிடமாவது அன்பில்லையோ அமெரிக்க லின்டன் பெர்க்கின் குழந்தையை (baby Linden berg) கொலை செய்த கொடும்பாவிகளாகிய கொள்ளைக் கூட்டத்தவர்களாவது நல்லவர்கள் என்று சொல்லாம். ஏனெனில் அவர்கள் அமெரிக்காவில் தனிவுடமைக்கொள்கையின் (முதலாளித்துவத்தின்) அக்கிரமத்தின் பயனாய் (கொள்ளைத் தொழில் செய்யும் கூட்டத்தார்) பணத்தை முன்னிட்டு—எத்தனையோ பேருடைய வாழ்க்கையை இன்பமடையச் செய்வதற்கு லின்டன் பெர்க் முதலாளியிடம் பணம் பெறச் செய்த ஓர் முறை கொலை செய்யக் கூடிய அளவுக்கு வந்தது. அப்படிப்பட்ட ஒரு கொடுமையான நிலைமையையும் ஏற்படுத்தி விட்டது! ஆனால் இந்தக்கடவுள் எத்தனை ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் கொலைசெய்தான். என்னே! பக்த கோடிகள் இரவு பகலாக வணங்கும் இக்கடவுளின் ஆணவமும், அகம்பாவமும்! இக்கடவுள் நீதியென்பது என்னவென்றே அறியாத—ஞானம் என்பதையே பார்த்திராதவராக அல்லவா தோன்றுகிறார். இவரை எப்படி பூரணமானவர் என்று சொல்லக்கூடும்.

உலகத்தில் சில வன்நெஞ்சர்கள் கொலை குற்றங்களைச் செய்து விட்டால் அவர்களை அரசாங்கங்கள், நீதி ஸ்தலங்கள் மூலமாய் விசாரித்து அக்குற்றவாளிகளுக்கு மரண தண்டனையோ, சிறைத்தண்டனையோ கொடுக்கிறார்கள். ஆனால் பீஹாரில் பூகம்பத்தை யுண்டுபண்ணி ஆயிரக்கணக்கான மாசற்ற அருமைக்குழந்தைகளை கொலை செய்தவனும், ஒருபாவமறியாத ஏழை எளியோர் வாழும் குடிசை முதல், தன வந்தர் வாழும் மாட மாளிகை வரை தரைமட்டமாக்கினவனுமாகிய கடவுளின் (நாம் மண்டியிட்டு வணங்கும் இரட்சகரின்) கொடுமைகளை விசாரிப்பதற்கு அரசாங்கங்கள் நீதி மன்றங்களை அமைத்ததில்லை. "கடவுளிடத்தில் எப்படி நீதி விசாரிப்பது?" என்று கேட்கலாம். "கடவுள் என்பது கற்பனைச் சொல், நீதி, அருள், அன்பு, தயைதாட்சன்யம், அறிவு, பூரணத்துவம், சர்வசக்தி முதலிய குணங்களையுடைய ஒரு கடவுள் இல்லை, அத்தகைய ஒருகடவுள் இப்பிரபஞ்சத்தைப்படைத்து இவைகளுக்கு சர்வாதிகாரியாயிருந்து இவைகளை யெல்லாம் நீதியுடன் பரிபாலித்து வருகிறான் என்பது அறியாமையால் ஏற்பட்ட கட்டுக்கதை, இப்பிரபஞ்சத்தில் நிகழும் நிகழ்ச்சிகளாகிய பூகம்பம், வெள்ளப்பெருக்கு, எரிமலை, நோய்.........முதலியவைகள் எல்லாம் இப்பிரபஞ்சத்தின் இயற்கை (விஞ்ஞான சாஸ்திரம் அறிந்தவர்களுக்கு இயற்கை விளங்கும்) இவ்வியற்கைக்குத் தன்னுணர்வு, நீதி, நியாயம், அருள், அன்பு, நல்லது, பொல்லாதது என்னும் குணங்களில்லை, நாம் கடவுள் என்னும் ஒன்றைப்பிரார்த்திப்பதால் இவ்வுலகத்தில் நிகழும் இயற்கை நிகழ்ச்சிகளை மாற்றவோ—தடுக்கவோ முடியாது." என்ற சத்திய தத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்குமா மூடியவில்லை? இன்றைய அரசாங்கங்கள் வக்கீல்களை (செப்பிடுவித்தைக்காரர்களை) மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கும் போதும், மக்களை மாக்களாக்கும் மதாச்சாரிகளுக்கு மதப்பிரசாரம் செய்ய இடமளித்துக்கொண்டிருக்கும் போதும் இங்கு சத்தியத்திற்கு இடமேது? ஆனால் ஸோவியத் ருஷியாவிலோ என்றால் எல்லா மக்களுக்கும் இச் சத்தியங்களை (நாஸ்திகத்தையும், சமதர்மத்தையும்) தாராளமாக எடுத்துப் போதிக்கிறார்கள்.

இது தான் போகட்டும். இக்கடவுளை வணங்கும் வணக்க ஸ்தலங்களையுமாஇக்கடவுள் தகர்த்தெறிவது? என்னே! பக்த கோடிகள் கடவுளே கதியென நம்பி இவரை (கடவுளை)த் தொழும் சர்ச்சுகளையும், மசூதிகளையும், கோவில்களையும்; தனவந்தர் வாழும் மாடமாளிகைகளையும், பரம ஏழைகள் குடியிருக்கும் குடிசைகளையும்; நலலோரையும், கெட்டோரையும், குழந்தைகளையும், கர்ப்பஸ்திரீகளையும் ஒரே அடியாக மண்ணோடு மண்ணாக்கிய இக்கருணாநிதிக் கடவுளின் நீதியும், வல்லமையும் யிருந்தவாறு என்னே! இதை வல்லமையென்று சொல்வதா, கொடுங்கோன்மை என்று சொல்வதா? அநீதியென்று சொல்வதா? அறியாமையென்று சொல்வதா? அல்லது பக்த சிகாமணிகள் சொல்லும்—நினைத்துக்கொண்டும் இருக்கும் படியான் கடவுள் ஒருவன் இல்லை யென்று சொல்வதா? பக்தர்கள் கடவுளுக்குத் தன்னை வணங்கும் வணக்க ஸ்தலங்களைக்கூட காப்பாற்றிக் கொள்வதற்கு யோக்கியதை, வல்லமை, அறிவு இல்லாமல் போய்விட்டதே! என்று ஏதாவது சிந்திக்கின்றார்களா? அல்லது கடவுளுக்கு பக்தர்கள் தன்னை வணங்குவது பிடித்தம் இல்லையாததால் வணக்க ஸ்தலங்களாகிய கோவில், மசூதி, மாதாகோவில்(சர்ச்) ஆகியவைகளையும் இடித்துத் தரைமட்ட மாக்கி விட்டார் என்றாவது கருதுகிறார்களா? இல்லையானல் மற்றபடி இதற்கு வேறு என்ன காரணம் இருக்கும் என்று கருதியிருக்கிறார்களோ தெரியவில்லை.

கடவுள் அவரை வணங்கும் வணக்க ஸ்தலங்களாகிய சர்ச்சுகளையும், மசூதிகளையும், கோவில்களையும் இடித்துத் தரைமட்ட மாக்கி மக்களுக்கு உபயோகமில்லாமல் நாசமாக்கியது நல்லது! என்று தான் கருதுகிறார்கள் போலும் எனெனில் அதற்காகக் கடவுள் பக்தர்கள் கடவுள் பேரில் யாதொரு குற்றமும் சாற்றுவதில்லை, அவரைக் குறைகூறவுமில்லை. ஆனால் ஸோவியத் ருஷியாவில் கடவுளை வணங்கும் வணக்கஸ்தலங்களை தொழிற்சாலைகளாகவும், ஆஸ்பத்திரிகளாகவும், கலாசாலைகளாகவும், தொழிலாளர் மன்றங்களாகவும் மாற்றி மக்களது நன்மைக்கு உபயோகித்துக் கொண்டுவருவதை "தப்பிதமென்றும், அது கடவுளுக்கு விரோதம்" என்றும் கடவுளின் வக்கீல்களாகிய இங்குள்ள ஆஸ்திக சிகாமணிகள் அதை (ஸோவியத் ருஷியாவை) கண்டிக்கிறார்கள். இதென்ன நீதி? இதென்ன உலகம்? இந்த நீதியை யறியாத—பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி பண்ணாத—மூட நம்பிக்கையை தோழனாக—வழிகாட்டியாகக்கொண்டிருக்கும் இவ்வாஸ்திக சிகாமணிகள் வாழும் இப்பைத்தியக்கார உலகில் இருப்பதைவிட இறப்பதே மேல் அல்லவா? அதனால்தான் ஒருவருக்கும் உபயோகமில்லாமல் வீணே இறக்கப் பிரியப்படாமல், அகில உலகமக்களும் இன்புற்று வாழும் சமதர்மத்திற்காக—சோஷியாலிஸத்திற்காக இறப்பதற்கு முன் வந்துள்ளோம். இச் சமதர்மக்கொள்கையினால் விளையும் பயன் இன்றைய மக்களுக்கு அனுபவிக்கக் கிடைக்காவிட்டாலும் வருங்காலத்தில் பின் சந்ததியாராவது இச் சமதர்மக் கொள்கையினால் கவலையற்று எல்லாத் தொல்லைகளையும் விட்டு விடுதலையடைந்து குதூகலமாக வாழ்வார்கள் என்பது தான் மனுஷாபிமானங்கொண்ட ஒவ்வொரு சமதர்மிகளுடைய முழு எண்ணமாகும்.

பகுத்தறிவு ஜோதியை பிரகாசிக்கச் செய்வதற்கு ஆஸ்திகர்கள் சொல்லும் எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த கடவுளையும், மதத்தையும் ஒழிப்பதற்கு கடவுளுடனும், மதத்துடனும் எதிர்த்துப் போராடும் சமதர்மிகளுக்கு உலக முதலாளித்துவம் எம்மாத்திரம்! அது ஒரு பொருட்டா? அவர்கள் (சமதர்மிகள்) உலக முதலாளித்துவத்தைத் தலைகீழாய் கவிழ்த்தி முதலாளித்துவம் இருந்த விடத்தில் சமதர்மம் என்னும் மனுஷாபிமானம் கொண்ட ஆட்சியை ஏற்படுத்துவார்கள். இந் நோக்கத்தைப் பூர்த்தி பண்ணுதவரையிலும் அவர்களுடைய (சமதர்மிகளுடைய) உள்ளத்தில் நிம்மதியுமில்லை. [இக் கட்டுரையிலும், இதற்கு முன் சென்ற வாரத்தில் வெளிவந்த கட்டுரையிலும், இனி வரக்கூடிய இக்கட்டுரையின் மற்றைய பகுதிகளிலும் இக் கட்டுரைகளுக்குச் சம்பந்தப்படாத சில விஷயங்களையும் குறிப்பிட்டிருப்பதாக வாசக நேயர்கள் கருதக்கூடும். அவையத் தணையும் அவசியம் என்பதை இக் கட்டுரைகளுக்கு முன்னுரையாக எழுதிய 22—4—34-ல் வெளியான நமது "புரட்சி"யில் "கடவுளும் பகுத்தறிவும்" என்னும் தலைப்பிட்ட கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளேன். எனினும் சிறிது அதைப் பற்றியும் ஈங்கு கூறுகிறேன். அதாவது:—நமது லட்சியம் சமதர்மம், சமதர்மத்திற்கு நேர் விரோதி முதலாளித்துவம் முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கு அதுடன் போர் தொடுக்கும்போது ஆஸ்திகர்கள் அதற்கு இடம் விடாமல் சமதர்மத்திற்கும்—முதலாளித்துவத்திற்கும் இடையே வந்து இருந்துகொண்டு "உள்ளவர்களைப் பார்த்து பொருமைகொள்ளாதீர்கள். அவனைப்போல் நானும் அனுபவிக்க வேண்டும் என்று பேராசைப் படாமல் உள்ளதைக் கொண்டு திருப்தியடையுங்கள். ஒன்றும் கிடைக்காவிட்டால் பொருமையுடன் இருங்கள். கடவுளுக்கு எல்லோருடைய தேவையும் தெரியும். உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் அவனே உணவளித்து ரட்சித்து வருகிறான்" என்று ஞான உபதேசம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அதனால் இந்த பித்தலாட்டக்காரர்களின் ஆஸ்திகத்தை எதிர்ப்பதற்கு பகுத்தறிவு வாதமும் சோம்பேறி மோசடிக்காரர்களின் முதலாளித்துவத்தை எதிர்ப்பதற்கு சமதர்ம வாதமும் அவசியம்!]

நாஸ்திகத்தைக்கண்டு கடவுள்கோபப்பட்டார் என்றால் இக் கடவுள் என்போன்ற நாஸ்திக வாதம்புரிகிறவர்களையாவது, அல்லது இன்று உலகத்திற்கே நாஸ்திகத்தைப் போதிக்கும் ருஷியாவிலுள்ள பழுத்த நாஸ்திகர்களையாவது, நமது, சுயமரியாதை இயக்கத்தையாவது அதன் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமியாவது பூகம்பங்களை யுண்டுபண்ணி தண்டிக்க வேண்டும்! நாஸ்திகத்தை விரும்பா விட்டால் கடவுள் நாஸ்திகர்களைப்பேசமுடியாமல் ஊமையாக்கி விடுவதுதானே. அல்லது நாஸ்திகர்களையே இவ் வுலகத்தில் இல்லாமல் செய்து விடுவதுதானே அல்லது நாஸ்திகம் தப்பு, ஆஸ்திகம் தான் சரி என்று தோன்றும்படி செய்துவிடுவதுதானே எல்லாம் வல்லவருக்கு இது இலேசான காரியம்தானே!

"கடவுளும், மதமும் இருந்த விடம் தெரியாமல் செய்யவேண்டும்'' என்று திட்டங்கள் வகுத்து இரவும் பகலுமாக நாஸ்திகப் பிரசாரம் செய்யும் ஸோவியத் ருஷியாவை விட்டு விட்டு "கடவுளே கதி" யென நம்பியிருக்கும் ஆஸ்திகர்களையுமா கடவுள் பீஹார் பூகம்பத்திற்கு உட்படுத்துவது? சுயமரியாதைக்காரர்கள் வாழும் ஈரோட்டிலாவது, கடவுளுக்கு பூகம்பத்தை உண்டுபண்ணி எச்சரிக்கை செய்ய முடியவில்லையா? நாஸ்திகத்தையே என்ன வென்றுங்கூட அறியாத ஆஸ்திகமே உண்மை யென்று நம்பி ஆலயங்களில் புகுந்து "அல்லாஹூ அக்பர் (ஆண்டவனே மிகப் பெரியவன்) என்று ஒரு நாளைக்கு 5 தரம் உரக்கக் கூவித்தொழும் முஸ்லீம்களையும், "தேவரீர்! தேவரீர்!!............" என்று எங்களை இரட்சியும் என்று பிரார்த்திக்கும் கிறிஸ்தவர்களையும், "சிவ! சிவா!!..." என்று பூஜிக்கும் ஹிந்துக்களையும், ஒரே அடியாக வணக்க ஸ்தலங்களுக்கு அடிப்பட்டு மாண்டு மடியச் செய்த இக் கடவுளை அறிவுள்ள ஒருவன் ஏற்றுக்கொள்ள முடியுமா? அதை வணங்க முடியுமா? அந்தோ! தன்னை சதா "ரட்சகரே! ரட்சகரே!" என்று வணங்கும் தனது "பக்த" கோடிகளிடத்திலாவது இக் கடவுளுக்கு அன்பில்லாமல் போய்விட்டதே! (இவர்கள் சொல்லும் கடவுளிருந்தால் அல்லவா?) (தொடரும்)

---

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பகர் ஸன்-யாட்-சென் என்பவர் இந்த இயக்கமும் செல்வாக்கு பெற்றிருந்தது. பொதுவுடைமை இயக்கத்தலைவர்களுள் ஒருவரான எம். வீர்னிஸ்கியும், மற்றும் சில பொதுவுடைமைக்காரர்களும் தேசியயக்கத்தில் புகுந்து அதன் செல்வாக்கையும், தங்கள் இயக்கத்திற்கு திருப்பி, தேசீய இயக்கத்தையும் பொதுவுடைமை இயக்கமாக மாற்ற முயன்றனர்.

லெனின், தன்னுடைய பிரதிநிதியாக ஒருவரை சைனாவுக்கு அனுப்பி, ஆங்குள்ள பொதுவுடைமை ஸ்தாபனத்தைப் பார்வையிட்டு, அது பலப்படுவதற்கான முயற்சிகளை யெல்லாம் செய்து வரும்படி ஏவினர். பிரதிநிதியும் அவ்வாரே சைனாசென்று பொதுவுடைமை ஸ்தாபனம் ஸ்திரப்பட்டு பலப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் மிகவும் ரகஸ்யமாக செய்து விட்டு ருஷியா திரும்பினர். திரும்பின வுடனே சைனா பொதுவுடைமைக் கட்சியைப்பற்றிய விபரங்களை அறிவித்த போது அவர் கூறியதாவது "திடசித்தமும், நல்ல கொள்கையும், அதற்கான திட்டத்தையும் உடைய ஒருவர் சைனாவில் இருப்பாரானல் அவர்தான் டாக்டர் ஸன். யாட் சென் என்பவர். சத்தான் கொள்கைகளையும் திட்டத்தையும், செல்வாக்கையும் கொண்ட ஓர்கட்சி இருக்குமானல் அதுதான் க்யோ-மின்-டாங் என்பது, பிரம்மாண்டமான சேனை பலங்கொண்டவர் சைனாவிலேயே வூ-பெய்-பு என்னும் பெயர்கொண்ட அவர் ஒருவரே! என்று லெனின் பிரதிநிதி அறிவித்தார். ருஷ்யவின் முக்கிய பட்டனமாகிய மாஸ்கோ நகரமும், சைனா சென்று வந்த பிரதிநிதி அறிவித்ததை ஒப்புக்கொண்டு மேற்சொன்ன செல்வாக்குப் பெற்ற சைனா தலைவர்களான டாக்டர் சன் என்பவரோடும். பு என்பவரோடும் நேரடியான சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டது, இவ்விதமே சோவியத் ருஷி சைனாவில் தோன்றியுள்ள பொதுவுடமை இயக்கத்துக்கு ஆதரவையும் தகுந்த பாதுகாப்பையும் அளித்தது.

1922-ம் வருடம் டிசம்பர் மாதம் ருஷியா மறுபடியும் எம். ஜோப்பி என்பவரை சோவியத் ஷ்பெஷல் தூதுவராக சைனா சென்று அங்குள்ள மேற்சொன்ன பிரபல தலைவர்களுடன் கலந்து பேசிவிட்டு வரும் படியாக அனுப்பிற்று. இதன் பயனாக ஒருவருக்கொருவர் பரஸ்பர சிநேக பாவமும், இனிமேல் என்னென்ன செய்யவேண்டும் அவைகளை எவ்வெப்படிச் செய்யவேண்டுமென்பதைப் பற்றியுமான ஓர்முடிவு மேற்படக் காரணமாயிற்று. ருஷியா சைனாவின் தேசீய விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையான தத்துவத்தை ஒப்புக்கொண்டவுடன் ஏகாதிபத்ய விலங்கினின்று விடுதலைப்படச் செய்யும் போராட்டத்தில் அது வெற்றி பெறுமளவும் தாங்கள் சைனாவிற்கு வேண்டிய உதவி செய்வதாகவும் ருஷியா உறுதியளித்தது. இந்தப்படியே எம். ஜோப்பியும், டாக்டர் ஸன்னும் சேர்ந்து ஒருகூட்டு அறிக்கை யொன்றையும் வெளியிட்டனர். இப் பிரஸ்தாப சமயத்தில் பொதுவுடமை கக்ஷியில் 2,000 அங்கத்தினர்களே யிருந்தனர். ஆனல் செந்தொழிற் சங்கங்களில் 60,000 அங்கத்தினர்கள் சேர்ந்திருந்தனர். சிலரிடத்துத்தான் அப்போது பரவியிருந்ததென்றும், கிராமாந்திரங்களினுள் விவசாயிகளுக்கும், பாமரர்களுக்கும் இன்னு எட்டவில்லை என்றும் தெரிகிறது. முதன் முதலில் சைனாவில் பொதுவுடமைக்கிளர்ச்சியை ஆரம்பித்தவரும், பொதுவுடமை இயக்கத்தின் தலைவருமான சென்-டு-ஸ்யூ என்பவர் ருஷியாவின் உதவியையும் ஆலோசனையையும் பெற்று பொதுவுடமைக் கிளர்ச்சியை தீவிரமாக்கி வந்ததோடு டாக்டர் ஸன் ஸ்தாபித்த கட்சியான க்யோ-மின்-டாங் என்னும் தேசிய கட்சியின் காரியக் கமிட்டி அங்கத்தினரிடையே சண்டையை யுண்டு பண்ணி அக் கமிட்டியை தாங்கள் கைப் பற்றி அதை பொதுவுடமை மயமாக்கி விடவுமுயன்றார்.

ஷாங்கே, கன்டன் ஆகிய இவ்விரு நகரங்களில் முதல் முதலில் பொதுஉடமைக் கிளர்ச்சி தொடங்கி பிறகு சைனா தேச முழுவதும் மூலை முடுக்குகளிலெல்லாம் காட்டுத்தீபோன்று பரவி விட்டது. ஆங்காங்கே பொதுவுடமைச் சங்கங்களை ஸ்தாபித்து அதன் மூலமாக தங்கள் பிரசாரத்தையும், கிளர்ச்சியையும் வலுவடையச் செய்தனர். பொதுவுடமைச் சங்கங்களில்லாத ஊர் சைனாவில் இல்லையென்றே சொல்லலாம்.

ருஷியாவின் ஏஜண்டாக சைனாவுக்கு போரோடின் என்பவர் வந்திருந்து பொதுவுடமையியக்கத்திற்கு வேண்டிய உதவிகளைச்செய்து வந்தார். அவர் அபாரமான வல்லமையும், சாமர்த்தியமும் வாய்ந்தவர். அவர் சைனாவிலுள்ள தன்னுடைய பொதுவுடமைத் தோழர்களை, சில மற்ற விவசாயிகளுக்கு நிலங்கொடுக்க வேண்டுமென்ற இந்தத்தீர்மானத்தை வாங்-சிங்-வூ என்பவரும், அவருடைய கோஷ்டியும் பலமாக மறுத்தது. இதன் பயனாக 1927ம் வருடம் ஹூனனின் முக்கிய பட்டணத்தில் பல கலகங்கள் கிளம்பின.

மேலும் பொதுவுடமைக் கட்சியினர் தங்கள் கவனத்தை சைனாவில் குடியேறியுள்ள அன்னிய நாட்டினர் மேலும் சற்று செலுத்தி அவர்களால் நாட்டிற்குண்டாகும் கெடுதல்களைப்போக்க முயன்றனர். சில சமயங்களில் அன்னிய நாட்டினரை வெளிப்படையாகத் தாக்கவேண்டிய நிர்ப்பந்தமும் பொதுவுடமைக்காரர்களுக்கேற்பட்டது. இதை ஓர் காரணமாக வைத்துக்கொண்டு தேசியக்கட்சியினர் பொதுவுடமைக்காரர்களைக் குறைக் கூற ஆரம்பித்ததோடு பொதுவுடமை இயக்கம் நாட்டிற்கே பெரும் தீங்கை விளைவிக்குமெனவும் திண்ணைப்பிரசாரம் செய்தார். இதை நம் தேசத்திய காங்கிரஸ் ஸ்தாபனத்தோடு ஒப்பிடலாம்.

'எங்கள் கொள்கை அன்னிய நாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து தேசியப்புனருத்தாரணம் செய்வதும், சர்வ தேசங்கத்தில் சம அந்தஸ்து பெறுவதுமேயாகும். ஆகையால் எங்கள் கக்ஷியாகிய கியோமின்டாங் பொதுவுடமைக் கொள்கைகளையோ அன்றி, சமதர்ம முறையையோ எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ள முடியாது. என்று தேசீயக்கட்சித்தலைவரான டாக்டர்-சென் கூறினர். பிறகு 1927ம் வருடம் ஏப்ரல் மாதம் தேசீயக்கட்சியின் மத்தியக் கமிட்டி கூடிற்று. அதில் பொதுவுடமையைப்பற்றிய விஷயம் விவாதிக்கப்பட்டது. அக்கமிட்டியில், சேனைத்தலைவரான வூ-டெஸ்-ஹியூ நீண்டதோர் பிரசங்கம் செய்தார். நீண்ட விவாதத்திற்குப்பின் பொதுவுடமை இயக்கத்தை ஒழித்து விடுவதென்ற தீர்மானத்திற்கு கமிட்டி வந்தது. இத்தீர்மானமும் நிறைவேறி விட்டது. தீர்மானித்த உடனே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆகவே தேசிய அரசாங்கத்திற்கும், பொதுவுடமைக் கட்சிக்குமிருந்து வந்த போலி நட்பு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அடக்குமுறைகள் துவங்கின.

ஜூலை 15ம் தேதி பொதுவுடமைக்கட்சியை நாட்டில் தலை எடுக்க வொட்டாமல் நசுக்க வேண்டுமென்ற தீர்மானமும் உடனே சட்டமாக்கப்பட்டு அதற்கான இராணுவச்சட்டங்களும் கடுமையான அடக்கு முறைக்கு புற்றீசல் போல் கிளம்பின. பொதுவுடமைக்காரர்கள் சொல்லித்தொலையாத கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும் உட்பட்டனர். சில சமயங்களில் அரசாங்கத்திற்கும் பொதுவுடமைக்காரர்களும் நேரடியான போர்களும் நிகழ்ந்தன. அதில் உயிர்களுக்கும், பொருள்களுக்கு மேற்பட்ட சேதம் எல்லை கடந்தது. இவ்விதமாக சைனா தேசத்து அரசாங்கம் பொதுவுடமை இயக்கத்தை ஒழிப்பதற்கான வழியில் மும்முரமாக ஈடுபட்டு வந்த காலத்து அரசாங்கத்திற்குச் சில புதிய தொல்லைகள் ஏற்பட்டன. அந்தத் தொல்லைதான் ஜப்பான் தேசம். ஜப்பான் கடந்த சில ஆண்டுகளாக சைனாவைப்பிடிக்க முயல்வதையும், அதன் பயனாக சைனா ஜப்பான் யுத்தம் நடந்ததையும் இன்னும் அது ஒரு முடிவுக்கும் வாராமலிருப்பதையும் வாசகர்கள் அறிவார்கள். ஜப்பானோடு சைனா அரசாங்கம் சண்டை செய்ய வேண்டியிருந்தபடியால் பொதுவுடமை இயக்கத்தை அடக்கும் வேலையை நிறுத்தி விட்டனர். பொதுவுடமைஸ்தாபனங்களின் சொத்துப் பறிமுதலின் மூலமும் இராணுவச்சட்டம் அமுல் நடத்தியதின் மூலமும் சைனா அரசாங்கம் பொதுவுடமை இயக்கத்தின் பலத்தை ஒடுக்கி விட்டதாக வீண்திருப்தி கொண்டிருக்கலாம்.

---


## மணமகன் தேவை.

16 வயதுடைய தமிழ் நன்ருய் எழுதப்படிக்கத் தெரிந்த நல்ல அழகும், திடகாத்திரமும் உள்ள கன்னிப் பெண்ணிற்கு வரன் தேவை'

மணமகன்.

சுயமரியாதைக்கொள்கையுடையவராகவும், உத்தியோகத்தில் மாதம் 1க்கு 40 ரூபாய்க்குக் குறையாத சம்பாத்தியம் உள்ளவராகவும் இதுவரை மணமாகாதவராகவும், வெள்ளாள ஜாதியில் பிறந்தவராகவும் இருத்தல்வேண்டும். கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

D. K. V. C/o
பகுத்தறிவு ஈரோடு.

# பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத் தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுகட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது விலை அணா 5.

## மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

## நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

## பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

## குடி அரசு கலம்பகம்.

இந்நூலில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

## பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி செனிக்யூ அவர்கள் தன் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோசனகளும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

## பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3

## மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது விலை அணா 3.

## "மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இதில் நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பதுபோன்ற பல அரிய விஷயங்களைக்கொண்டதாகும். சுமார் 128 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 6.

இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

## நான் நாஸ்திகன் ஏன்?

இப் புத்தகமானது தோழர் பகத்சிங்கு அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானார் என்பது பற்றியும் ஏன் நாஸ்திகரானார் என்பது பற்றியும் லாகூர் சதி வழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணா 3.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷ்ய பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்த தலைமையுரையை ஒன்றாகத்திரட்டியதாகும். சமூக சீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் கையில் ஒவ்வொனறுமிருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ஷா அவர்கள் அமெரிக்காவைப் பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும்.

விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளையொன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டவையாகும்.

விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா ½.

புததகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.